722

No. M:.2210 வருஷ சந்தா ரு. 1 8

சிரியர்:—வை. மு. கோதை நாயகி அம்மாள்

JEGAN MOHINI

ஜகன் மோகினி

8-NOV. 192 MADRAS

மலர் IV October 1927 இதழ் 11



J.C
ஊ211, N22J7
N27. 4. 11.
182839.

ன் மோகினி ஆபீஸ்,
26 தேரடித் தெரு,
ல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

நமது சந்தா நேயர்கட்கு ஒரு விக்ஞாபனம்

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

சர்வ வியாபியான பரந்தாமனின் பரமகாருண்ய கடாக்ஷத்தினாலும் உங்களுடைய ஆதரவினாலும், "ஜகன்மோகினிச் செல்வியின்," நான்காவதாண்டு இனிது நடைபெற்று அடுத்த இதழுடன் முடிவடைகின்றது. இடையில் எனது தேக அசௌக்கியத்தினால் எற்பட்ட காலதாமதத்தையும் கவனியாது பத்திரிகைக்கு ஆதரவளித்து உற்சாகப்படுத்தியதற்காக எனது மனமுவந்த வந்தனத்தை உங்களுக்குச் செலுத்துகின்றேன்.

டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கவேண்டிய ஐந்தாவது ஆண்டில் ஓர் அருமையான புதிய நாவலை வெளியிட உத்தேசித்திருக்கிறேன். குறைந்த சந்தாவில் நிறைந்த பக்கங்களுடன் நாவல்களை வெளியிடுவதே எனது நோக்கமாகையால் சந்தா நேயர்களெல்லோரும் புதுவருஷச் சந்தாவை அனுப்புவதுடன் தமது சிநேகிதர்களையும் சந்தாதாரர்களாக்கி ஆதரவளித்து என்னை உற்சாகப்படுத்தினால் பக்கங்களை அதிகப்படுத்தி ஒரு வருஷத்தில் இரண்டு நாவல்களைப் பூர்த்திசெய்ய எற்பாடு செய்யலாமென்று கருதுகிறோம்.

இவ்வாண்டின் முதல் சஞ்சிகையில் **"சண்பகபுவனம்"** என்னும் நாவல் சீக்கிரத்தில் வெளியாகுமென்று விளம்பரப் படுத்தினோமாயினும் அதன் பின்னர் எற்பட்ட தேக அசௌக்கியத்தினால் அதை எழுத இயலாமற் போயிற்று. நமது சந்தாநேயர்களில் சிலர் புத்தகத்தின் விலை தெரிவதன் முன்பே தமது அபிமானத்தைக் காட்டிப் பணம் அனுப்பியும், பலர் அதைச் சீக்கிரத்தில் வெளியிடுமாறும் தூண்டியதால் 10-வது சஞ்சிகையை முன்னதாகவே யனுப்பி விட்டு, அதன் பெயரை **"சண்பக விஜயம்"** எனச் சிறிது மாற்றி எழுதிப் பெரும் பாகமும் அச்சாய்விட்டது. இன்னும் பத்து தினங்களில் புத்தகம் பைண்டு செய்து விற்பனைக்குத் தயாராய் விடும்.

டிம்மி 40 பாரங்களும் அழகிய சித்திரப் படங்களும் கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூபா 1-12-0 வைத்திருக்கின்றது. வி. பி. யில் அனுப்புவதால் எழுணா தபாற் செலவு அதிகமாகும். **நமது சந்தா நேயர்கட்குத் தபாற்செலவுட்பட ரு. 1-8-0 க்குக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறோம்.** ஆசையால் புது ஆண்டின் சந்தாவுடன் ரூ. 1-8-0 அனுப்பினால் புத்தகம் ரிஜிஸ்டர்ட் போஸ்டில் அனுப்பப்படும். **இதனால் அவர்களுக்கு 11 அணா மிகுதி யென்**பதைக் கவனிக்கவும்.

ஐந்தாவது ஆண்டின் கொண்டாட்டத்தை முன்னிட்டு புது வருஷ சந்தாவை **டிசம்பர்மீ 20-தேதிக்குள்** அனுப்பும் சந்தாதார்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு பின்வரும் பரிசுகளைக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறது.

OFFICE OF THE REGISTRAR OF ... BOOKS
N. ______
8-NOV 1927
MADRAS

உ

ஓம்

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! முனத்தைச் சார்ந்து

மலர் IV	பிரபவஹு ஐப்பசிமீ October 1927.	இதழ் 11.

ஓம் : ஸ்ரீ கோதாயை நம:

ஸ்ரீமதெம்பெருமானுர் திருப்பள்ளி யெழுச்சி

சீர்மருவுங்கமலத் திருமகள்தன் கணவன் திருவருளாலுயரும் தேசிகரிற்
றலைவன்
பார்பரவும் கருணைப் பழுதறுமகிழ்மாறன் பரிவுடனருளிய நற்பனுவல்க
ளாயிரமும்
கார்நிகர் உனது பெருங்கருணையினுலுலகில் கட்டுரைசெய்தருளிக்
கலியதனைக்கடிவாய்
ஏர்மருவும் பொழில்சூ ழினியபெரும்பூதூ ரெதிவரனே யமலா! பள்ளி
யெழுந்தருளே, 1.

தினமதனுக் கிறைவன் செங்கரமாயிரமும் திக்குறுமிருளிரியச் சேர்ந்தன
குணவரைகாண்
உனதுகழல் கமலம் தொழுதுயிர் பெற்றிடுவார் உயர்ந்தபுகழ்த் திருமாலடியவ
ரெய்தினர்காண்
சினமதனைக்கடியும் தேசிகரிற்றலைவா திருமலைநம்பிதனக்கபிமதனுனவனே!
எனதுயிருக்கமுதே இனிய பெரும்பூதூரெதிவரனே யமலா! பள்ளி
யெழுந்தருளே. 2.

பதமுறுமெய்ச்சுருதித் தலையில்வரும் பொருளைப் பதின்மர் கலைப்பொருளோ
டொக்கமிகப்பகர்வார்
சதுமறையிற் பொருளைத் தத்துவ நூலுடனே சந்ததமும் சொலுவார்
வந்தொலிமிக்கதுகாண்

இதனையினிச் சுடரோனுதய மதிற்குறையா யெண்ணி யெனைப்போல்வார்
விண்ணில்மிகப்புகவே
இதமருள்வித்தகனே இனிய பெரும்பூதூ ரெதிவரனே யமலா! பள்ளி
யெழுந்தருளே. 3.

தப்பில் நெறிப்பொருளைத் தனியொரு தேர்தனிலே தன்னுயிரான தனஞ்
சயனவனுக்கருளால்
ஒப்பியிசைந்திடவன் றுபதேசித்தருள்கூ ருத்தமனடியிணையே யுள்ளிய
தஞ்சமென
செப்பிலடங்கா நன்மணி நிகருனதருளால் செப்பிய செவ்விய, என்
திருவரதர்க்கினிய
எப்புவியும் புகழ்சே ரினியபெரும்பூதூ ரெதிவரனே யமலா! பள்ளி
யெழுந்தருளே. 4.

கொத்தலரும்பொழிலில் கோதறுதாமரையில் கொண்டெழு வண்டொலியும்
கோவலர் குழலொலியும்
மத்துறுதயிரொலியும் மாதர்கள் வளையொலியும் மறையவரோ தொலியும்
மண்டி எழுந்தனகாண்
பத்திடையடியவர்தம் பயனதுவானவனே பரசமயத்தினர் மப் பாற
வுதித்தவனே.
எத்திசையும்புகழும் இனியபெரும்பூதூ ரெதிவரனே யமலா! பள்ளி
யெழுந்தருளே. 5.

தேசிகர் பஞ்சவரும் செப்பமுடன் திருமால் சிந்தைமகிழ்ச்சியுடன்தெரிசன
முய்ந்திடவே
மாசில் துயத்துடனே நின்கணுரைத்திடுவார் மற்றுளமறையோரும் வந்தனர்
நற்றுணையாய்
காசினியில் பொலிவேய் கச்சிநகர்த்திருமால் கருணைதனக்குரியாய் கற்றவர்
கற்பகமே
ஈச எனக்குயிரே இனிய பெரும்பூதூ ரெதிவரனே யமலா! பள்ளி
யெழுந்தருளே. 6.

தெண்டிரை தவழ்பொருளைத் தெள்ளிய தண்புனலும் திருமகளுறை மார்
பன் திருவடியிற்புனலும்
புண்டரிகாடவிசூழ் பொன்னிதனிற்புனலும் பொங்கு சிலம் புந்திப்புனலுட
னத்தனையும்
கொண்டுகுடங்கள்தனிற் கூரகுலாதிபனும் மற்றுளவாரியரும் குழுமியெழுந்
தனர்காண்
எண்டிசையும் பொலிவா ரினிய பெரும்பூதூ ரெதிவரனே யமலா! பள்ளி
யெழுந்தருளே. 7.

செங்கமலச் செறவிற் பெடையொடு மினிதமரும் சிறப்புடை அன்னமும்
தன் சிரகுதறிக்கரைமேல்
அங்குளவிரையதனைக் கருதியதற் கருகே அடியிட வைத்ததுகாண் அஞ்சிறை
வரியுடனே
எங்கள் [illegible]! எழில்வாதர்க்கினியாய் எழிலுற பொற்கமலப் பதயுக
முடையவனே!
எங்குமெழும் பொழில்சூ[illegible]பெரும்பூதூரெதிவரனே யமலா! பள்ளி
யெழுந்தருளே. 8.

182839

சின்னமுமத்தளமும் சீர்மலிகாளமுடன் திகழ்திருமால் பதியிற்றே செழு
சங்கதுவும்
முன்னமளித்தனர்காண் முழுதுணர் வேதியனே முடும்பையர் குலத்தி
லுறும் வேங்கடவர்க்கினியாய்!
என்னையுமுன்னடியிற் கொண்டவனே பரனே யெழில்மகிழ் மாறனடிக்கி
சையு மிகப்புனிதா!
இன்னமுதப் புனல்சூ ழினிய பெரும்பூதூ ரெதிவரனே யமலா! பள்ளி
யெழுந்தருளே. 9.

கஞ்சமலர்க்கணமும் கள்ளவிழ் முல்லைகளும் கலகியணைந்து வரும் கடிகமழ்
மாருதமும்
மிஞ்சிமிதித்தணுகக் குணதிசையது வெனவே மெல்லவெழுந்தனகாண்
கற்றிளமேதிகள் தாள்
அஞ்சுகமேனி நிகர்புல் லதனைக் கருதாவத்துணை யாதரவால் அடியிட
வுற்றனகாண்
எஞ்சலிலிமையவர்சூ ழினியபெரும்பூதூ ரெதிவரனே யமலா! பள்ளி
யெழுந்தருளே. 10.

கடிகமழும் பொழில்சூழ் குருகைநகர்க்கிறைவன் கழலிணை தொழுதெழு
வோன் எதிவரமாமுனிதன்
அடிதனிலே மிகவும் பரிவுடனுரைசெய்த பள்ளி யெழுச்சிதனைப் பகர்பவர்
தாமினிதாய்
கொடியணி நெடுமதிளும் கோபுரமும் புடைசூழ் கோதறுபரமபதம் குறுகிய
திற்றிருமால்
அடியிணையதனருகே அடிமைகள் செய்தினிய அமரர்களால் மிகவும்
ஆதரமுறுவர்களே. 11.

திருக்குருகூர் அ. தே. இராமாநுஜ ஐயங்கார்.

ஹாஸ்யக் கதை

ஒரு நாள் காலை எழு மணி சுமாருக்கு இரண்டு விதவைகள் கையில் சொம்புடனும் கக்கத்தில் வெள்ளைப் புடவையுடனும் குளிப்பதற்காக காவிரிக்கரையில் வந்தார்கள். அவ்விருவரில் ஒருத்தி சொம்பைத் தேய்த்துக் கொண்டே பேசலானாள். "என்ன தாயாரம்மா! உங்கள் நாட்டுப் பெண் அம்புஜம் சென்னையிலிருந்து வந்தாளாமே; எதோ அவ்வூர் அதிசயமான சாமான் கொண்டு வந்து இருக்கிறாளாமே. அதை எனக்குத் தாங்கள் காட்டப் படாதோ?" என்று கேட்டாள்.

அதை கேட்ட தாயாரம்மாள் புடவை தோய்ப்பதை நிறுத்தி விட்டு மோவாயில் கை வைத்தபடி அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டே "அடி பெருந்தேவி! அந்த அதிசயத்தை என் கேட்கிறாய்? 30 ரூபாய் கொட்டி ஒரு மிஷன் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறாள். அதன் பேர் என்னமோ ருக்மிணியோ சத்யபாமையோ குக்கராம். அது ஒரு நொடியிலே எல்லா சமயலும் தானே செய்கிறதாம். நேத்து எங்க ஆத்திலே அது தான் சமயல்

செய்தது. நான் அந்த அதிசயத்தைப் பார்த்து என் நாட்டுப் பெண்ணை "அடி அம்புஜம்! அந்த மிஷன் என்னமாய் சமயல் செய்யும்? மொளகாய் அறைக்க வேண்டாமா? புளிகரைக்க வேண்டாமா? கிளறிக் கொடுக்க வேண்டாமா? கஞ்சி வடிக்க வேண்டாமா? இதை யெல்லாம் அந்த மிஷன் எப்படியடி செய்யும்? "என்று கேட்டேன். நான் இப்படிக் கேட்டதும் அந்த மதங் கொண்ட சிறுக்கி என்னைப் பார்த்து கைகொட்டி சிரித்தபடியே "அத்தை! அதில் ஸ்டீம் இருக்கிறது. அதனாலே தான் நொடியில் சமயல் ஆகிறது" என்று சொன்னாள். அந்த வார்த்தையைக் கேட்டதும் நான் பயந்து போய் அந்த மிஷன் செய்த சமயலைச் சாப்பிடாமல் பசியில்லை என்று சொல்லி விட்டுக் கோயிலுக்குப் போய் ஆறு வடை, ஐந்து தோசை, எட்டு முறுக்கு சாப்பிட்டு, பத்து வாழைப் பழமும் உரித்து வாயில் போட்டுக் கொண்டு ஒரு படி தயிரை குடித்து விட்டுப் படுத்துக்கொண்டேன்.

பெருந்தேவி:—என்ன தாயாரம்மா! அந்த மிஷினைப் பார்த்து நீங்கள் ஏன் பயப்பட வேண்டும்?

தாயாரம்மாள்:—ஐயையோ! ஸ்டீம் என்று ஒரு இங்லீஷ் பிசாசு உள்ளே உட்கார்ந்து கொண்டு நொடியில் சமயல் செய்கிறது. அது இல்லா விட்டால் எப்படி நொடியில் சமயல் ஆகும்? நீ தான் யோசித்துப்பாரேன்.

பெருந்தேவி:—ஆமடி அப்படியா சமாசாரம்? அம்புஜத்துக்கு அந்தப் பிசாசிடம் பயமில்லையோ? அவள் ஏதாவது மந்திரம், யந்திரம் கிட்ட வைத்து இருப்பாள்; இல்லாமல் போனால் அவளுக்கு மாத்திரம் என்ன அவ்வளவு தைரியம்? அவளும் எங்களைப்போல் ஒரு பெண் தானே? நீ சொல்வதைப் பார்த்தால் எனக்கும் ரொம்பவும் பயமாய் இருக்கிறது. இன்று ராத்திரி எனக்குத் தூக்கமே பிடிக்காது.

தாயாரம்மாள்:—அடியே பெருந்தேவி! இப்பொழுது தான் என் நினைவிற்கு வருகிறது. அவளுடைய இடது கையில் என்னமோ ஒன்று கட்டிக் கொண்டு இருக்கிறாள். அது தான் அந்தப் பிசாசை அடக்கும் யந்த்ரமோ என்னமோ? அதைப் பார்த்து அது என்ன வென்று நான் நேற்றைய தினம் கேட்டேன். அதற்கு என் நாட்டுப் பெண் அதன் பெயர் என்னமோ ரிஸ்டுவாச் என்று சொன்னாள்.

பெருந்தேவி:—பார்த்தீர்களா! ஏதாவது தாய்த்துக் கட்டிக்கொண்டு இருப்பாள் என்றும், இல்லாவிட்டால் அவ்வளவு துணிச்சலாய் அந்தப் பிசாசைக்கொண்டு வரமாட்டாள் என்றும் நான் சொல்லவில்லையா? அது இங்கிலீஷ் பிசாசு என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?

தாயாரம்மாள்:—அதன் பெயர் அவள் சொன்னதும் நான் தெரிந்து கொண்டேன். எப்படி யென்றால் சூத்திரப் பிசாசாய் இருந்தால் காட்டேரி, முனி, பாவாடை என்று பெயர் வைத்துக்கொள்ளும். அது இங்கிலீஷ் பிசாசு ஆனபடியால் ஸ்டீம் என்றும் குக்கர் என்றும் பேர் வைத்துக்கொண்டிருக்கிறது. எனக்கு என்னமோ ஆத்துக்குப் போகப்பயமாய் இருக்கிறது. இப்படியே ஸ்டேஷனுக்குப் போய் என்னுடைய பேத்தி ஊராகிய வேலூருக்குப்போகிறேன்-என்றுசொல்லியபடியே குளிக்காமல் ஈரப்புடவையுடன் ரயிலுக்குப் போய் விட்டாள். பெருந்தேவி இச்சங்கதியை ஊர்முழுவதும் சொல்ல, இதைக் கேட்டவர்களெல்லாரும் அவ்விருவருடைய புத்தி கூர்மையை மெச்சி வயிறுவடிக்கச் சிரித்தார்கள்.

A. கிருஷ்ணபாய்.

ஹாஸ்யத் துணுக்குகள்.

கண்ணுசாமி:—அடேய்! பாப்பார பசங்களை பாத்தியாப்பா! அவங்க அந்தணேண தாலுகே! என்று பாட்டு பாட்ராங்க. அந்தணன்னு பாப்பானல்லவா அர்த்தம்? இவங்கள்ளாங் கூடகிண்ணு பாப்பார தாலுகா என்று ஒன்னு எற்படுத்தி யிருக்கருப்போலிருக்குது. அந்த அந்தணேன தாலுகா எங்கிருக்கிதின்னு கேட்டு தெரிஞ்சதும் அதே நம்ப ஜஸ்டிஸ் அவங்களண்டை சொல்லி அதை ஜஸ்டிஸ் தாலுகா என்று மாத்திட சொல்லணும்டா! இதை உட்டுட்டாகா பாப்பாருக்கு கொயுப்பு அதிகமாகிவிடும். பாப்பார பஸங்க துள்ளுதுங்க; அதெல்லாம் அடக்கிபுடணும்.

பொன்னுசாமி:—அடே பாவி! உனக்கு பாப்பார்மேல் இருக்கிற ஆத்ரத்திலே நீதிதெரியாத பேசரியே! அந்தண தாலுகாவுமில்லே; ஒண்ணுமில்லே. இது வேதம்படிக்கராங்க. அதிலே அந்தரேண தாலுகே! எண்ணு சொல்ரதை நீ என்னென்னமோ அர்த்தம் வைச்சி பேசரையே நல்லாக்குது.

* * * *

மாணிக்கம்:—என்னப்பா! குளத்தில் இத்தனை கும்பல் நிறைந்திருக்கின்றது? மத்தியிலே ஒரு பாப்பானும் நிக்கருனே! இதென்ன விசேஷம்!

முத்து:—இது பெருத்த புண்யகாலமப்பா! இந்த ஐப்பசி மாதத்தை துலாமாசமென்று கூறுவார்கள். துலாக்காவேரி மகிமை எவ்வளவோசிறந்தது. இந்த மாதத்தில் பெண்பிள்ளைகளெல்லாம் தேங்காய், பழம், வெற்றிலே, பாக்கு, மஞ்சள், புஷ்பம், குங்குமம், சந்தனம், ரவிக்கை, புடவை முதலியவைகளைக் கொண்டுவந்து குளத்தில் வந்துள்ளவர்களுக்குத்தானம் செய்வார்கள். எத்தனையோ கட்டப்பட்டு துட்டைச் சிலவிட்டு சர் திவான்பகதூர், ராவ்பகதூர், ராவ்ஸாகிப் முதலிய பட்டம் பெறுகிருர்கள். இந்தவிடத்திலோ அம்மாமார்கள் ஓர் புதுப்பட்டம் கட்டமின்றி இட்டத்துடன் பெறுகிருர்கள். அதாவது நடுவேயுள்ள பாப்பான் சங்கல்பம்செய்வதாக நின்றுகொண்டு அம்மாமார்களுக்குச் சொல்லிக் கொடுக்கிருர். அதாவது அப்ளாம்தரும்புரும்உஷ்ணம் பசுவர்ணம் தடும்புடும் பக்ஷணம் வரணம்தாயே பூர்வ கர்போபசாந்தயே! இந்த புண்ணிய காலத்திலே தீர்த்தமாடினல் சகலவிதமான பலமுண்டே; பாக்யமுண்டே; தனமுண்டே; தான்யமுண்டே; என்று பெரிய சுலோகம் சொல்லிக் கொடுப்பார். அதில் அம்மாமார்கள் 2 அணு சிலவுடன் பலமுண்டே பட்டம் பெற்றுவிடுகிறர்கள். இது பெருத்த சாமர்த்தியமல்லவா? அது தான் விசேஷம்.

மாணிக்கம்:—பேஷ்! பேஷ்! இவ்விதம் செய்தால் பலமுண்டு என்ருல் நீயதை முண்டே என்று கூறுவது வேடிக்கையாக இருக்கின்றதே! சுக்லாம்பரதம் சொல்வதற்கு என்னமோ கிண்டலாக அப்ளாம் தரும்புரும் என்றுகூறி சிரிக்கவைக்கின்ருயே!

வை. மு. கோ.

முக்கிய எச்சரிப்பு.

Mr. B. K. வெங்கடராமஐயர் என்பவர் நமது ஏஜண்டாக வேலே செய்வதாகச் சொல்லி அநேகரிடம் பணம் பெற்றுக்கொண்டு இருக்குமிடந் தெரியாமல் மறைந்திருக்கிறார். ஆகையால் இனிமேல் யாரும் சந்தாப் பணத்தை அவரிடம் கொடுக்காமலிருக்கும்படி எச்சரிக்கை செய்கிறோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னே.

9/10-வது சஞ்சிகையில் வெளியான விடுகவியின் பொருள்:—சோக்கட்டான்

பரிசுபெற்றவர்:—சந்தாநம்பர் 1761.

வி. பி. ஆரோக்கியசாமி பிள்ளே,

Headmaster, Board School.

கற்பகநாதர்குளம், திருத்துறைப்பூண்டி.

இனும்! இனும்!! இனும்!!!

நாவல் வாசிப்போர்க்கு நல் விருந்து.

விஷதாரி அல்லது சர் மதனகோபாலரின் மர்மம்.

அற்புதமான துப்பறியும் நாவல்; வாசிப்போர் மனதினைக் கவரும் அதிசய நவீனம் இதுதான். சுமார் 230 பக்கங்களில் வழவழப்பான கிளேஸ் காகிதத்தில் அச்சிடப் பட்டது......................விலே ரூ. 1 4 0

ரோஜாலி அல்லது ஒரு தீவின் அரசி.

ரஸம் ததும்பும் நவீனகங்களில் முதன்மை வாய்ந்தது. 200 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த கிளேஸ் காகிதங்கொண்ட பதிப்பு. விலே ரூ. 0 12 0

இதர நாவல்கள்:

மர்மமுகி	0 12 0	ஜெயகுமாரன்	1 8 0
பச்சை மோதிரத்தின் மர்மம்	1 0 0	சுந்தர்சிங்	1 4 0
இராஜகோபால சந்திரவதனுள்	...	...	2 8 0

குறிப்பு:—(i) புஸ்தகம் எதாவது ஆர்டர் செய்தால் "போலீஸ்கிலி போதிராயர்" என்ற இனிய நாவல் இனமாய் அனுப்பப்படும்.

(ii) 2 அணு (இந்தியா) ஸ்டாம்பு அனுப்பினல் "போலீஸ்கிலி போதிராயர்" "ராவ்பஹதூர் ரஸதுல்லா சாஹிப்" என்ற இரண்டு நாவல்கள் இனம்!

விலாஸம்:

வ. கிருஷ்ணஸ்வாமி சர்மா,

11, சின்னப்ப முதலி வீதி,

மஞ்சக்குப்பம். Cuddalore S. India.

ஸங்கீதம்! ஸங்கீதம்!!

பிரசித்திபெற்ற நூலாசிரியர் வித்வான்

கே. வி. ஸ்ரீநிவாசய்யங்கார் இயற்றியது.

ஸங்கீத சிந்தாமணி.

விலை ரூபா 3—0—0

இது ஸங்கீத வித்தியார்த்திகட்கும், உபாத்தியாயர்கட்கும் பாடகர்கட்கும், இன்றியமையாத ஓர் அரிய புஸ்தகம்.

இதுவரையிலும் வெளிவராத தியாகராஜ கீர்த்தனைகள், இன்னும் அநேக பிரசித்தி பெற்ற வித்வான்கள் கீர்த்தனைகள் முதலியவைகள் ஸ்வர தாளங்களுடனும் ராகலக்ஷணங்களுடனும் அச்சிடப்பட்டிருக்கின்றன.

குறிப்பு:—இப்பத்திரிகையின் பெயரை இம்மாதத்திற்குள் குறிப்பிட்டு ஆர்டர் செய்பவர்கட்கு தபாற் செலவு இனாம். முழு விவரத்துக்கு கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதவும்.

எம். எஸ். ராமுலு கம்பெனி, இராயபுரம், மதராஸ்.

சுந்தர்சிங் அல்லது பாஸ்கரவிலாஸ் படுகொலை.

வாசகர்களே! நீங்கள் இதுகாறும் இந்நாவலாசிரியர் எழுதிய இதர துப்பறியும் நாவல்களைப் படித்திருக்கலாம். ஆச்சரியத்தையும் புத்தி சூக்ஷ்மத்தையும் உண்டாக்குவதில் இதற்கு இணை எதுவுமில்லையென்றே கூறலாம். பாஸ்கர வம்சத்தார்கள் ஒன்றன்பின் ஒருவராய்க்கொல்லப்படுவதும், கடைசியாக துப்பறியும் சிங்கம் சுந்தர்சிங் கொலையாளியைக்கண்டு பிடிப்பதும் படிக்கப் படிக்க இனிமை யாயிருக்கும். விலை ரூ. 1 4 0

சரோஜனி.

இப்பொழுதே வெளிவந்த புதிய நாவல். படங்களுடன் கூடியது. படிக்கப் படிக்க தெவிட்டாத இன்பந் தரவல்லது. துப்பறியும்நாவல்களில் மிகச் சிறந்தது. உடனே ஒன்று வாங்கிப்படித்து ஆனந்த மடையுங்கள். விலை ரூபா இரண்டே!

வத்ஸா கம்பெனி.
திருவல்லிக்கேணி, சென்னை

நீங்கள் எதிர்பார்த்திருந்த

இன்பரகசியம்.

வெளிவந்துவிட்டது! **வாங்கிப்பாருங்கள் !!**

	ரூ.	அ.		ரூ.	அ.
ஜீவவசியபரமரகசியம்	3	0	ஸ்திரீபுருஷ சமத்துவம்	1	0
மணவாழ்க்கையின் மர்மம்	2	4	கொக்கோகம்	1	0
மதிமோசக்களஞ்சியம் 2-பாகம்	2	0	மதனரதிரகசியம்	1	0
மனோவசிய சாஸ்திரம்	1	8	ஸ்திரீபுருஷ ரகசியம்	1	0
கைத்தொழில்வணிகரகசியம்	1	0	இரதிமதனசிருங்கார ரகசியம்	0	12
மாயாஜால விநோதம்	1	0	சிற்றின்பசாஸ்திர சிந்தாமணி	0	8
சதிபதிகளின் மர்மம்	1	0	இரகசிய சாஸ்திர சிந்தாமணி	0	8
சரீரமர்ம சாஸ்திரம்	1	0	விகடசித்தர் கோவை	0	8
பிரம்மஞான பரமரகசியம்	1	0	காதலரின் வெற்றி	0	6

குறிப்பு:—வி.—பி. சிஸ்டமில்லாத பிணாங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர் முதலிய வெளி நாட்டு நண்பர்கள் புத்தகவிலையுடன், தபால் செலவையுஞ் சேர்த்து முன்பணமாக அனுப்பிப் பெறவும்.

விலாசம்:—எஸ். ஸி. ஆர். பகவான் கம்பெனி,
சௌகார்பேட்டை, சென்னை.

ALARM TIME-PIECE.

German Made	Rs.	6	0	0
New Echo with Alarm	,,	7	8	0
Do. without	,,	6	8	0
Ansonia make Princes	,,	6	0	0
Startle Alarm Time-piece	,,	10	0	0

GAUTHA & CO.,

333. Thumbu Chetty Street,

Madras.

நாயுடு, தாம் எதையும் அறியாதவர் போல் பயித்தியமாக நடித்த வண்ணம், இங்கு நடக்கும் சகல சம்பாஷணைகளையும் கவனித்துத் தமக்குள் "இதுவும் நமது நன்மைக்கே" என்று எண்ணி மகிழ்ந்தார்.

உள்ளிருந்து வந்த இருவரும் நாயுடுவின் அருகில் வந்து "ஏ கிழவி! நீ எந்த ஊரிலிருந்து வருகிறாய்?" என்றார்கள்.

நாயுடு இவர்கள் கேட்பதைச் சற்றும் லக்ஷியம் செய்யாமல் ஓவெனப் பெரிய கூச்சலிட்டு நகைத்த வண்ணம், இருவர் முகத்தையும் உற்றுக் கவனித்தார். கால் முதல் தலை வரையில் நிமிர்ந்தும் குனிந்தும் முகத்தை ஆயிரம் கோணல் செய்தும் பார்த்து உதட்டைப் புதுக்கினார்.

இது கண்ட இருவரும் நகைத்து "ஏ கிழவி! ஏன் எங்களை விரைக்க விரைக்கப் பார்க்கிறாய்?" என்றார்கள்.

நாயுடு:—யப்பா! நீ ராஜாவாச் செண்ணு பாக்கறேன். நீ ராஜாவா! கூஜாவா? நீ எந்த ஊருயப்பா?

வந்தவர்:—ஏன் கேட்கிறாய்? நீ எந்த ஊரு?

நாயுடு:—நான் ஆகாச ஊருக்குப் பூமிதேவி போல ராஜா.

வந்தவர்:—ஓகோ! அப்படியானால் நீயேன் கீழே வந்தாய்?

நாயுடு:—"நான் எங்கே கீழே வந்தேன்! ஆகாசத்திலேதானே பறக்கறேன்"—என்று கையை விரித்துக் கொண்டு தட்டாமாலை சுற்றிக்குதித்தார்.

இது கண்ட இருவரும், "சரி உள்ளேவா! சோறுபோடுகிறேன்" என்று கூறி உள்ளே சென்றார்கள். நாயுடுவையும் உள்ளே வரும்படியாகப் பையன் அழைத்துச் சென்றான். நாயுடு உள்ளே செல்கையிலும் தாமே ஏதோ பேசிக் கொண்டே சென்றார். உள்ளே சென்றதும் கிழவி ஒரு இலையில் குழம்பு வார்த்துக் கலந்த சோற்றையும் அதன் பக்கத்தில் ஏதோ வற்றலையும் நாயுடு எதிரில் வைத்தாள்.

இதைப் பார்த்த நாயுடு மிகுந்த சந்தோஷ மடைந்தவர் போல் நடித்துக் கொக்கரித்துச் சோற்றிற்கருகில் உட்கார்ந்து ஆவலோடு

கையில்எடுத்து ஒரு பெரிய கவளமாகச் செய்து அதை முதலில் பந்தடிப்பது போல அடித்தார்; பிறகு அதைச் சுவற்றில் மண் அறைவதுபோல் விட்டு எறிந்தார்; மீண்டும் தான் ஓடி அவற்றையெல்லாம் திரட்டி உயர வீசி எறிந்தார்; தம்முடைய கை, கால், முகம் முற்றும் சோற்றை வாறிப் பூசிக் கொண்டார்; மீண்டும் இலையோடு அதை எடுத்து ஒரு மூலையில் போட்டு விட்டுத் துணியில் கையைத் துடைத்துக் கொண்டு படுத்து விட்டார்.

இவர் செய்த கோலங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த எல்லோரும் நகைத்தபடி எதுவும் பதில் பேசாமல் வாளாவிருந்து விட்டார்கள். இவர் படுத்து நித்திரை செய்பவர் போல் தலை முதல் கால்வரையில் மூடி முக்காடிட்டுக் கொண்டு சற்று அசையாமல் படுத்திருந்தார்; பின்னும் கட கட வென்று சிரித்தார். ஏதோ பிதற்றுகிறார். இவ்விதமே செய்துப் பின் முன் போலவே நித்திரை செய்பவர் போல் பெரிய குறட்டை விட ஆரம்பித்தார். அங்குள்ளவர்கள் "பயித்தியத்தை வேடிக்கை பார்த்தால் முடிவு ஏது?" என்று கூறி அவரவரிடத்தில் படுத்தார்கள். கிழவி மட்டும் நாயுடு படுத்திருந்த இடத்திற்குச் சமீபத்திலேயே படுத்தாள். நாயுடு நன்றாகத் தூங்குவதாகப் பாசாங்கு செய்தார். நடுநிசியாகும் சமயமாயிற்று. அங்குள்ள ஏனையோரும் அயர்ந்து நித்திரை செய்கிறார்கள். நாயுடுவிற்கு மட்டும் தூக்கமென்பதே வரவில்லை. அவர் மெல்ல எழுந்து அங்கு சுவற்றை யெல்லாம் பிறாண்டுவதும் தடவுவதுமாக அந்த வீட்டை முற்றும் பார்த்தார். அங்கு சிறியது சிறியதாக உள்ள இரண்டு மூன்று அறைகள் உட்பக்கம் தாளிட்டிருப்பதாகத் தெரிந்தது. அவற்றை இவர் எவ்விதம் திறப்பது என்று யோசித்தார். அந்த அறையில் யார் படுத்திருப்பார்கள் என்றதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது இவருடைய முக்கிய நோக்கமாகையால் கதவைத் தடவி பார்த்தார். அதில் ஒருவிதத்துவாரமும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர் கதவை மெல்ல உள்ளுக்கு அழுத்தினார். அது திறக்கவில்லை. மற்றொரு கதவைத் தமது பலங் கொண்ட மட்டும் தள்ளினார். அது படீரென்று தாள் கழன்று பெருத்த ஓசையுடன் திறந்து கொண்டது. அதுகண்டு நாயுடு திடுக்கிட்டவராய்

"ஐயோ! இந்தச் சத்தம் கேட்டு யாரேனும் விழித்து வந்து விட்டால் என்ன செய்வது?" என்று ஐயுற்று ஒரு நிமிஷத்தில் தான் முன்பு படுத்திருந்த இடத்தில் வந்து முக்காடிட்டுக் கொண்டு படுத்து விட்டார்.

இவர் நன்ருகப் படுப்பதற்குள் அருகிலிருந்த கிழவி திடீ ரென்று கண் விழித்துக் கொண்டு பதறப் பதற எழுந்து "யார் கதவு திறந்த ஓசை கேட்டது?" என்று கர்ஜித்துக் கொண்டே சுற்றிப் பார்க்க ஆரம்பித்தாள். அங்கிருந்த அறையின் கதவு திறக் கப்பட்டிருப்பதுடன் உள்ளிருந்த ஒருவன் விழித்துக்கொண்டு 'யார் கதவைத் திறந்தது ?" என்று கூச்சலிட்டுக்கொண்டே வெளியில் வந்தான்.

இருவரும் யார் திறந்தது என்பதை யறியாமல் "யார் திறந்தார்கள்?" என்று கேட்டுக்கொண்டே முற்றும் சுற்றிப் பார்த் தார்கள். எங்கும் யாரையும் காணவில்லை. இந்தப் பயித்தியத்தின ருகில் வந்தார்கள். நாயுடு முக்காடிட்டுக்கொண்டு குறட்டை பல மாக விட்டுக் கொண்டிருக்கிருர். இவர்கள் இந்தப் பயித்தியந்தான் திறந்திருக்குமோ என்று நாயுடுவின் மீதே சந்தேகங் கொண்டு அவரது முக்காடை இழுத்தார்கள். நாயுடு முக்காடை நழுவ விட்டவராய்க் கண் திறவாது படுத்திருந்தார். கிழவி நாயுடு வைப் புரட்டினுள். நாயுடு அலறி யடித்துக் கொண்டு கண் விழித்தவர் போல் நடித்துத் தத்தபித்த வென்று பேசுவதுடன் காக்காய் வலிகண்டவர் போல் கால் கைகளைக் கோணற் கோணலாக இழுத்துக் கொண்டு ஒரு விதமான விகாரக் கூச்சலிட்டுக் கத்திக் கண்ணை மிரள மிரள விழித்தார்.

இதைக்கண்ட இருவரும் "ஐயோ! இதென்ன கஷ்டம்! இந்தப் பயித்தியத்திற்கு வலிகூட வராப்பலே இருக்குதே! அட சனி யனே!" என்று கூறக் கிழவி நாயுடுவின் கையை அழுத்திக்கொண் டாள். சில நிமிடநேரம் அம்மாதிரி செய்துபின் தாமே தெளிவடைந்தவர் போல் சும்மாவிருந்து விட்டார். கிழவி நாயுடுவை நோக்கி "இந்த ஊட்டுக்கதவை நீ தொறந்தயா ஆயா!" என்ருள்.

நாயுடு இவள் கேட்பதையே செவியில் வாங்காமல் தான் ஏதோ சம்பந்தமில்லாத வார்த்தைகளைக் கூறி நகைத்துக்கொண்டு உட்கார்ந்தபடியே சுற்றிச் சுற்றி வருகிறார். இதற்குள் கிழவி நாயுடுவின் நடைக்கொம்பு தான் வைத்தவிடத்திலேயே இருக்கின்றதா என்று பார்த்தாள். அது அங்கேயே இருக்கக்கண்டு "அப்பா! தம்பீ! இதோ நான் வெச்செ வெடத்திலேயே இருக்குதப்பா! பயித்தியம் நடந்திருக்காது" என்றாள். பிறகு வேறு விசேஷமில்லாமையினால் யார் திறந்திருப்பார்கள் என்று சந்தேகித்துப் பேசிக்கொண்டபடியே இராப்பொழுதை நித்திரை போகாமலிருந்தே கடத்திவிட்டார்கள்.

நாயுடுவோ "நாம் கதவைத்திறந்தும் பார்ப்பதற்கில்லாமற் போய்விட்டதே. இங்கு ஏதோ விசேஷமிருக்கவேண்டும். இல்லையேல் இவர்கள் ஏன்கதவு திறந்ததற்கு இவ்விதம் சந்தேகங்கொண்டு சுற்றியலைந்தார்கள்?" என்று எண்ணியவராய் அவரும் இரவைக் கடத்தினார்.

பொழுது புலர்ந்தது. பையன் வழக்கம்போல் ஆப்பம் வாங்கச் சென்று திரும்பிவந்து, "ஆயா! அந்த ஆப்பக்கடைக்கிழவி இண்ணைக்கு ஆப்பமே கொண்டாரலையாம். நான் சேநேரம் பார்த்து ஒத்தரும் காணலே; வேரேகடெலே வாங்கிவந்தேன்" என்றான். இதை நாயுடு கேட்டுக்கொண்டே இருந்தார். இதற்குள் அங்கிருந்தவர்களில் ஒருவன், "எனக்கென்னவோ அந்தக் கூடைக்காரியிடம் சந்தேகந்தான். அவள் முகத்தைக் கவனித்தபோது ஆண்பிள்ளை முகம்போலவும் முகத்தில் ஏதோ பூசி யிருப்பது போலவும், மீசையிருந்த அடையாளம்போல் ஒருவிதமான கருப்பும் காணப்பட்டது. அதோடு அந்தக் கிழவி இங்கு பையன் வரும்போது தொடர்ந்து வருவதற்கு ஆளையனுப்பித் தானும் வந்து ஏதோ காரணத்தையும் கூறிச் சென்றாளல்லவா? அவைகளெல்லாம் எனக்குச் சந்தேகமாகவே இருக்கின்றன. அந்தக் கிழவி இவனை ஏன் தொடரவேண்டும்? இன்னும் 'காரியமில்லாமல் நான் வருவேனா?' என்று அவள் சொன்னதாகப் பையன் சொல்கிறானே! அதையுற்றுக் கவனித்தால் பெரும் சந்தேகமாகத்தானிருக்கிறது. காரிய மில்லாமல் என்பதைத் தனக்கு முக்கியமான காரியமில்லாமல் வருவேனா என்பதா

கக்கொள்ளலாமல்லவா! ஒருகால்அவள் திருவொற்றியூர்த்தடியனைக் சேர்ந்தவளோ அல்லது அந்தத் தடியன்தானோ என்று எனக்குப் பெருத்த சந்தேகமாக விருக்கிறது. ஏனெனில் நான் சென்றவாரம் சென்னைக்குச் சென்றிருந்தபோது தந்திரமாய்த் திருவொற்றியூருக்குச் சென்று அவனுடைய வீட்டு வேலைக்காரியைக் கண்டு நான் முக்கிய காரியமாக நாயுடுவைக் காணவேண்டுமென்று அவசரமாகக் கேட்டேன். அதற்கவள், 'சைதாப்பேட்டையில் யாரைப்பற்றியோ வயக்கு நடக்குதாம்; அதுக்காவ அவரு அலையிராருன்னும் ஊரிலே இல்லையின்னும் கேள்விப்பா! எனக்குத் தகவலே தெரியாதுப்பா'' என்றாள். அப்போதே எனக்குச் சந்தேகமுண்டாயது. அந்தத் தந்திரவாதி ஒருகால் இங்கு வந்து நடிக்கின்றானோ என்றும் சந்தேகிக்கிறேன். இரண்டு நாட்களுக்குமுன் பாலக்கோட்டை பட்டணத்தில் அவனைப்போலவே ஒரு மனிதனைப் பார்த்ததாக நம்ப கண்ணுசாமி சொல்கிறான். ஆகையால் அவன் இந்தப் பாலக் கோட்டையிலேயே இருப்பதாக நான் எண்ணுகிறேன். அவன் அகப்பட்டால் அவனை நான் நசுக்கிவிடுவேன். இன்று கடையைக் காணவில்லை என்பதில் அவள் மீதே எனக்குச் சந்தேகமதிகரிக்கின்றது'' என்றான்.

இதைக் கேட்ட மற்றொருவன் ''ஏனடா பயப்படுகிறாய்? அவன்தானா இங்குவந்து பிழைத்துச் செல்லப்போகிறான்! வந்தால் அவனை ஓரே பஸ்மமாகச் செய்ய நமது கிங்காரள் காத்திருக்கின்றார்கள். ஆகையால் கவலையே வேண்டாம்.

முதல்வன்:—அட பயித்தியமே! அந்த மாயாவி நமது கண்ணில் படுவான் என்று எண்ணுகிறாயா? அவன் சிலமாதங்களுக்கு முன் போலீஸாரைப்போல் நடித்துவந்த சில கொள்ளைக் கூட்டத்தாரைப் பிடித்த தந்திரத்தை நாம் பத்திரிகையில் படிக்கவில்லையா? அவன் மாயஜாலம் கற்றவனல்லவா? ஆனாலும் இந்தக் காட்டில் தேடிக்கொண்டு வருவது கஷ்டந்தான்—என்றான்.

இவர்கள் இவ்விதம் பேசிக்கொள்வதையெல்லாம் மிக்க கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த நாயுடு இவர்களுடைய முன்னெச்சரிக்கையையும், பயத்தையும், தம்மைப்பற்றிப் புலன் விசாரிப்பதை

யும், தம்மேல்கரை காணாத ஆத்திரம் கொண்டிருப்பதையும் கண்டு வியந்து தமக்குள் நகைத்துக்கொண்டார்; தம்மை யொருகால் இன்னானென்று அறிந்துகொள்வார்களோ என்று ஐயமுற்றார். எனினும் தமது வேலையில் கண்ணாகவிருந்தார். அன்று பகல் முற்றும் இவர் அங்கு நடப்பதை யெல்லாம் கவனிக்க எண்ணினார். ஆனால் உதயமானதும் அவரை வீதியிற்கொண்டு வந்து உட்காரவைத்து விட்டுக் கால்நடைக் கொம்பை எடுத்துவைத்துக் கொண்டார்கள்.

இவர் நொண்டிபோல் நடித்தமையால் கொம்பின்றி நடந்தால் விஷயம் வெளியாய்விடுமென்றெண்ணி வீதியிலேயே அன்றுபகற் பொழுது முற்றும் கழித்தார்; தம்முடைய செய்கையை விடாமல் செய்து கொண்டே அவர்களிட்ட போஜனத்தை வாறியிறைத்து விட்டுப் பட்டினியாகவே கிடந்தார். அன்று இரவு பலத்த மழை வந்து விட்டது. எல்லோரும் படுத்தார்கள்; முதல் நாளைப்போலவே நாயுடுவைப் படுக்கச் செய்தார்கள். நாயுடு படுத்த படியே தம் போக்காகப் பேசி நகைத்துக்கொண்டே எழுந்து மழைத் தண்ணீரில் நிற்பது, சுற்றுவது இவ்விதமாகச் சிறிதுநேரம் கழியப் படுத்து, நித்திரையில் ஆழ்ந்தவர்போல் நடித்து, முதல் நாளைப்போல் நடுநிசியில் எழுந்து சுற்றிப் பார்த்தார். அந்த வீட்டின் பின்பாகத்தில் ஓரறை வெளிப்புறம் பூட்டியிருந்தது கண்டு தனது மடியிலிருக்கும் கருவியின் உதவியால் பூட்டைத் திறந்து உள்ளே சென்றார். அங்கு மனிதர்களையே காணவில்லை. சில உதவியற்ற சாமான்களும் துணிகளும் நிறைந்திருந்தன. அவர் அவைகளைக் கிளறிப் பார்த்துக்கொண்டே வந்தார். அந்தச் சாமான்களை விலக்கிக்கொண்டே வருகையில் கீழ்ப்பாகத்தில் இவர் காலுக்கு மரத்தின்மீது நடப்பதுபோல் பொத்து பொத்தென்ற ஓசைதெரிந்தது. அது கேட்டு அவர் சந்தேகித்துத் தனது பாக்கெட்டு லைட்டை ஏற்றிக் கவனித்தார். அதில் ஒன்றும் தெரியவில்லை. சமமான தரைபோலவே காணப்பட்டது. அவர் அதை மெல்லக் கையால் தடவிப் பார்த்தார்; தட்டிப் பார்த்தார். ஓசைமட்டும் தரையில் அந்த இடத்திற்கும் மற்ற இடத்திற்கும் வித்தியாசப்பட்டது. நாயுடு அந்தப் பாகத்தைத் தமது கையிலிருக்கும் ஆணியால் குத்திப் பார்த்தார். மரத்துண்

டின் சிறுய் சிறிது வெளியில் வந்தது. அதனைக் கண்டதும் அவர்க்குச் சந்தேகம் அதிகரித்தது. அந்தப் பக்கமட்டும் மரம் இருப்பதால் அவ்விடத்தில் ஏதோ மர்மமிருப்பதாக நன்ருக யூகித்தறிந்துகொண்டு அதைத் திறக்கும் வழி எப்பக்கமுள்ளதென்று வெகுநேரம் நாற்புறமும் சுற்றிச் சுற்றிப் பார்த்தார். ஒருவித வழியும் கிடைக்கவில்லை. இதை எவ்விதம் திறப்பது என்பதை யறியாமல் நாயுடு வெகுநேரம் பல மாதிரியாகப் பெயர்த்தும் பார்த்தார். எல்லாம் வீணுயின. "ஐயோ! உதயமாய்விட்டால் நாம் இரவு வரும் பரியந்தம் ஒரு வேலையும் செய்வதற்கே இல்லாமல் போய்விடுகின்றதே! இதைத் திறந்து இதனுள்ளிருப்பது யாதென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமே! என்ன செய்வது?" என்று யோசனை செய்தார். தனது கையிலுள்ள ஆயுதங்களினுல் அதனைப் பெயர்த்தால் அந்த ஓசை கேட்டு யாரேனும் கண் விழித்துவிட்டால் என்ன செய்வது? ஆயினும் நாம் இதைத் திறந்தே தீருவதென்றெண்ணித் தன் மடியிலிருந்த ஆயுதங்களால் மெல்ல அதனைத் திறக்க முயன்று பலகையின்மீது ஆணிகளை வைத்து மெல்லத் தட்டினுர். அப்போது பலகைகள் உடைய ஆரம்பித்தன; உடைந்து உட்புறமே விழுந்தன. அவ்விதமே பல கைகளை உடைத்துவிட்டு உள்ளே தாமும் ஓசை செய்யாமல் இறங்கினுர்; சகிக்கமுடியாத நாற்றம் குபீரென்று கிளம்பி நாயுடுவின் மூக்கைத் துளைத்து மண்டைக்கு ஏறியது. உடனே அவர் தலைசுற்றவாரம்பித்தது. அவர் அதனை மெல்லச்சகித்துக்கொண்டு தமது விளக்கைப் பிடித்துப் பார்த்து வந்தார். அவ்விடத்திலும் ஒரு மனிதரிருப்பதாகத் தோன்றவில்லை. சந்தடியே காணவில்லை. அந்த இடம் சுமார் 15 அடி நீளமும், பத்தடி அகலமுமுள்ளதாய்க் காணப்பட்டது. அவர் அந்த இடத்தில் சுற்றுவதற்குள் வயிற்றுப் புரட்டலுண்டாய் வாயிலெடுத்து விட்டார். நாற்றத்தைச் சகிக்கமாட்டாமல் மெல்லச் சுற்றி வருகையில் அங்கு கோடியில் ஒரு சிறிய திண்ணையின் மீது பூச்சிகள் சூழ்ந்துகொண்டு குபீர் குபீர் என்று பறப்பதைக் கண்ட நாயுடு அங்கு சென்று பார்த்தார். அங்கு ஒரு சவம் கிடந்தது. அதனருகில் நாயுடு சென்று மூச்சைப் பிடித்தவாறு கவனித்தார். அது ஓர் பெண்பிள்ளையின் சவம்போலக் காணப்

பட்டது. அதனுடைய ஆடையையும் சிறிது தலைமயிரையும் வளையல்களையுங்கண்டே பெண்பிள்ளையின் உருவமென்று நாயுடு நிச்சயித்துக்கொண்டார். அந்தச் சவத்தின் தேகம் அழுகிப்போய் கொளகொளத்து நீராய் ஓடிக்கொண்டு புழுக்கள் சேர்ந்துமிருப்பதைக் கண்ட அவருக்குப் புரட்டல் இன்னும் அதிகரித்துவிட்டது. அதன் முகமுற்றும் நீராய் வழிந்தபடியால் சவம் யாருடையதென்று அறிய ஒருவித அடையாளமும் தெரியவில்லை. இவர் அதனை உற்றுச் சற்று நேரம் பார்த்தார். அவ்விடத்தில் இவரால் இருக்கமுடியாமையால் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு முன் வந்தவிடத்திற்கே வந்தார். இவரால் பெயர்த்துத் தள்ளப்பட்ட பலகையில், ஏதோ ஒருவிதமான கலரில் எழுத்துக்கள் காணப்பட்டன. அதை நாயுடு கவனித்து எழுதிக்கொண்டார். அதைப் படித்ததும் அவருக்கு வெகு சந்தேகமாய் விட்டது. அவர் அவ்விதம் இன்னுமெங்கேனுமிருக்குமோ என்று பார்த்தார். எங்கும் எதுவும் காணப்படவில்லை. அவர் முன்போலவே ஏறி வெளியே வந்து கீழே விழுந்த துண்டுகளையெல்லாம் ஒன்றுகூட்டி வைத்து முன்போல் துணி மணி சாமான்களை வாரி மேலே போட்டுவிட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்து படுத்துவிட்டார்.

உதயமாயிற்று. அன்று முற்றும் மழை சிறிது தூறிக்கொண்டிருந்தமையால், நாயுடு நடைப்பக்கமே இருக்க நேர்ந்தது. அன்று இரவு வீதியில் ஒரு மாட்டுவண்டி வந்து நின்றது. அதை நாயுடு கவனித்துக்கொண்டே இருந்தார். அதிலிருந்து ஒரு மனிதன் இறங்கி உள்ளே வந்தான். அவன் வந்ததும் இங்கிருந்த மனிதர்களில் சிலர் எதிர்கொண்டு சென்று அழைத்து வந்து உட்காரவைத்துப் பேசலாயினர்.

'தாங்கள் நேற்றே வருவதாகச் சொல்லியவர்கள் ஏன் வரவில்லை?' என்று ஒரு மனிதன் கேட்டான்.

வந்தவன்:—நேற்று மழை அதிகமாயிருந்தபடியால் வரக்கூடாமல் போயிற்று. இவ்விடத்து நிலைமை எவ்விதமிருக்கின்றது? ஆசாமிகள் எவ்விதமிருக்கிறார்கள் ?

கண்ணுச்சாமி:—காரியம் சரியாகவே நடக்கின்றது. ஆசாமிகள் என்றும் போலத் தானிருக்கிருர்கள்.

வந்தவன்:—இவ்விடத்தைக் கண்டுகொண்டு யாரும் வரவில்லையே !

கண்ணுச்சாமி:—யாரும் வரவில்லை. இந்த வனம் யாருக்குத்தான் தெரியும். முந்தின தினம் ஒரு பயித்தியம் இவ்வழியே வந்தது. அதனை நாங்கள் இவ்விடத்திலேயே மடக்கிப் போட்டிருக்கிறோம். அதோ பாருங்கள்; தன்னிச்சையாகப் பேசுகின்றது.

வந்தவன்:—ஓகோ! வரும் போதே பார்த்தேன்.

இதற்குள் அவர்கள் நடைக் கதவை உட்புறம் தாளிட்டுக் கொண்டு விட்டார்கள். நாயுடு "இவர்கள் கதவைத் தாளிட்டுக்கொண்டு என்ன செய்கிருர்களோ தெரியவில்லையே. இதைநாம் கவனிக்க வேண்டும்" என்று எண்ணித் தாமும் உள்ளே செல்வதெப்படி என்று யோசித்தார். உடனே அவர் வீதியில் சென்று பார்த்தார். பேரிருள் சூழ்ந்திருந்தது. வண்டியும் மாடும் மட்டும் வீதியில் நிறுத்தப்பட்டிருந்தன. வண்டிக்காரனை வண்டியில் காணுமையால் வந்த ஆசாமியே வண்டியை ஓட்டியதாக எண்ணினுர். அவர் அந்த வீட்டிற்குப் பக்கத்திலுள்ள ஒரு பெரிய புளியமரத்திலேறி வீட்டின் கூரைமீது மெல்ல இறங்கித் தன்னுடைய கந்தை, பொந்தை முதலியவைகளை அவ்விடத்திலேயே வைத்துவிட்டு மெல்லப் பின்பக்கம் ஓசைசெய்யாது முற்றத்தின் பக்கம் இறங்கி, எதிரிலுள்ள சாமானறையில் சென்று மறைந்து கொண்டு அங்கு நடப்பவற்றைக் கவனித்தார்; முன்கட்டிலிருப்பவர்கள் என்னமோ பேசுவதும், சைகை செய்வதும், ஒவ்வொரு அறையாக நுழைந்து பார்த்து வருவதையும் கண்டார்; தாமிருக்கும் அறைக்கும் யாரேனும் வந்துவிடப் போகிருர்களே என்று நடுங்கினுர். இவர்கள் எல்லோரும் இந்தச் சாமான் அறையின் பக்கம் வருவதைக்கண்டு அவர் குடல் குலைந்தது. அதனுல் அவர் திடுக்கிட்டார். அவர் தாம் இங்கு வந்திருப்பதை எவ்விதத்தில் மறைத்துக் கொள்வதென்று யோசித்தார். அங்கு ஒரு கயிற்றுக்கட்டிலும் அதன் மேல் ஒரு மெத்தையைக் கட்டி வைத்திருந்த கட்டும் இருக்கக்

கண்டு அதனைப் பிரித்து அதனுள் தான் புகுந்து சுருட்டிக் கொண்டு சந்தடி செய்யாமல் இருந்தார். வந்தவர்கள் நேரே சமயலறைக்குச் சென்று விட்டார்கள். இவ்வறையில் கிழவி இரு முறை வந்து எதையோ எடுத்துச் சென்றாள்.

மெத்தைக் குள்ளிருக்கும் நாயுடு மெல்லத் தலையை நிமிர்ந்து வழி செய்து கொண்டு பார்த்தார்; அங்கு எதிரிலுள்ள சமயலறையில் எல்லோரும் சாப்பிடுவதை யறிந்தார்; தாம் முற்றும் பார்த்ததும், இது தான் தருண மென்று எண்ணி வெளியில் வந்து அந்த அறையை விட்டு மெல்ல அடிமே லடியாய் நடந்து, முதலில் பூட்டியிருந்த அறை அப்போது வெளிப் புறம் மட்டும் தாளிட் டிருப்பதைக் கண்டு அதைத் திறந்து கொண்டு உள்ளே சென்றார்.

அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! இவர் நாடி வந்த மனிதர்கள் அங்கு ஒருவரையும் காணமல் முற்றும் ஏமாற்ற மடைந்து விட்டார். "ஐயோ! இங்கு ஏதோ இரகஸிய மிருப்பதாக எண்ணி இந்த இடத்தையே தேடித் திரிந்து காலத்தைக் கடத்தி விட்டேனே! இங்கு யாரையும் காணவில்லையே" என்று எண்ணியவராய் இன்னுமுள்ள இரண்டறைகளில் பார்த்தார். அங்கே கோரமான ஒரு காட்சியைக் கண்டார். இரண்டு ஆண் பிள்ளைகளை ஒருவர் முதுகை ஒருவர் முதுகுடன் ஒன்றாகச் சேர்த்து, அவர்களின் கை கால்களையும் பின் புறத்தில் ஒன்று சேர்த்து இறுகக் கட்டி யிருப்பதுடன் இருவரது வாயிலும் துணி அடைத்திருந்தது. அவர்களின்தேகம் துரும்பிலும் கேவலமாய் இளைத்துப்போ யிருந்தது. இதைக் கண்ட நாயுடு மிகவும் வருத்தப் பட்டு "இவர்களை யாது காரணமாகக் கட்டியிருக்கிறார்கள்? இவர்கள் யாராக இருக்கக் கூடும்? நாம் இவர்களை அவிழ்த்து விடுவோமானால் இங்குள்ளவர்களிடம் நாம் அகப்பட்டுக் கொண்டு காரியம் கெட்டு விடத்தக்க நிலைமைக்கு வந்து விடுமே!" என்று யோசித்தார். எனினும் அவர்களைத் தாம் இத்தகைய கோரமான நிலைமையில் கண்டு சும்மா போவது அழகல்லவென்று எண்ணியவராய் அவர்களருகில் சென்றார். அவர்கள் தங்கள் நினைவை இழந்து படுத்துக் கிடந்தார்கள். நாயுடு தட்டிப்

பார்த்தார். ஒன்றும்பேச்சு மூச்சில்லை. தாம்அதிக நேரமிங்கு இவர்களிட மிருந்தால் அவர்கள் போஜனம் செய்து இங்கு வந்து விட்டால் என்ன செய்வ தென்று எண்ணியவராய் அவர்களைத் தைரியமாய் அப்படியே அலாக்காய்த் தூக்கித் தோள்மீது சாய்த்துக் கொண்டு ஓசை செய்யாமல் கதவைத் திறந்து வீதியில் சென்று பின் அருகிலிருந்த தோப்புக்குள் போய் முன்பு தாம் வரும் போது சித்தமாக இருக்கும்படி சொல்லிவிட்டு வந்த ஆட்களிடம் அவர்களை விட்டுச் "சிலர் இவர்களை முதலில் வீட்டுக்கு எடுத்துச் சென்று கட்டுகளை அவிழ்த்து வெளியில் செல்லாவாறு பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறி நடந்தவற்றை விஸ்தாரமாய்ச் சொல்வதற்கு நேர மில்லாததால் ஏதோ சுருக்கமாகக் கூறினர்; பின் தம்முடன் இருவரை அழைத்துக் கொண்டு ஓட்டோடியும் வந்து முன்பு கட்டுண்டு கிடந்த அறையில் அவர்களைக் கட்டியிருந்தது போலவே தம்மிரு ஆட்களையும் கட்டிப்போட்டு விட்டு, அவர்களிடம் முக்கியமானசிலசெய்திகளைக் கூறி அவ்விதம் நடந்துகொள்ளும் படியாக எச்சரிக்கை செய்தார்; அப்பால் அவ்வறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு முன்போலவே சாமானறையிலிருந்து எட்டிப் பார்த்தார்; இவர்கள்,சுமார் பத்துப்பெயர்கள் வெகுஅட்டகாஸமாய்உட்கார்ந்து, சிரித்து, மகிழ்ந்து பேசிக் கொம்மாள மடித்தபடியே நிதானமாகச் சாப்பிட்டுக் கொண்டிருப்பதை யறிந்தார். அதன்பின் அங்குள்ள அறைகளைப் பார்த்து விட்டு முன்போலவே கூரை ஏறித் துணிகளை எடுத்துக் கொண்டு வீதியில் வந்து வண்டியை முற்றும் உற்றுக் கவனித்தார். வண்டியில் ஒரு கோணி மூட்டை வைத்திருந்தது. அது பெருத்த மூட்டையாக இருப்பதைக் கண்டு அதில் என்ன இருக்கிற தென்று பார்த்தார். மாட்டுக்காகத் தவிடு வைத்துக் கட்டப் பட்டிருப்பதை யறிந்தார். உடனே இவருக் கொரு யோசனை தோன்றியது. அதாவது, அந்தக் கோணியிலிருக்கும் தவிட்டைக் கொட்டி விட்டு அதில் தான் புகுந்து கொண்டால் இந்த மனிதன் எங்கிருந்து வந்தான் என்பதை அறியலாமென எண்ணித் தாம் முன் சென்ற இடத்திற்கு ஓடி ஓராளை யழைத்து அவனுக்குத் தன் வேஷத்தை மாட்டிவிட்டுத் தன்னைக் கோணியில் வைத்துக் கட்டும்படியாயும், இன்னும் சில வார்த்தைக

ளையும் கூறிவிட்டுக் கோணியிலிருந்த தவிட்டைச் சப்பாத்துப் புதரில் கொட்டிவிட்டுத் தான் அதனுள் அமர்ந்தார். மற்றவன் அதை இறுகக் கட்டிவிட்டு நடையில் நாயுடு சொல்லியது போல உட்கார்ந்து அவரைப்போலவே பேசவும் பிதற்றவும் ஆரம்பித்தான்.

பின் சிறிது நேரத்திற்கெல்லாம் போஜனத்தை முடித்துக் கொண்டு எல்லோரும் வெளியில் வந்தார்கள். வந்தபின், தாம் பூலந் தரித்துக்கொண்டு, வந்த மனிதன் எழுந்து அவர்களுடன் நாளைய மறுநாள் வருவதாகக் கூறி வீதியில் வந்து வண்டியில் ஏறி உட்கார்ந்து அவர்களைப் பார்த்து "நான் சொல்லியது நினைவிருக்கட்டும். பைத்தியத்தை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அதைப்பற்றி நான் கூறியதை மறக்காதீர்கள்" என்று கூறிவிட்டு மாட்டைத் தட்டி விட்டான். வண்டியும் போகத் தலைப்பட்டது. நாயுடு தனது கைவிரலால் கோணியில் துவாரங்கள் செய்து கொண்டு பார்த்தபடியே ஷோக்காகப் போய்க் கொண்டிருக்கிறார்.

17-வது அதிகாரம்

உண்மைக்காதலும் உயிருக்கு ஹானியும்

காந்தாமணியின் பெற்றோர்கள் தமது புதல்வியின் அகால மரணத்தைக் கண்டு அந்த துக்கம் சகியாமல் அதே வேதனையினால் பீதியடைந்து நாளடைவில் நோய்கொண்டு ஒரே படுக்கையாய்ப் படுத்துவிட்டார்கள். அவர்கள் "காந்தா! காந்தா!" என்று இராப் பகலாக அலறியவாறு துடிக்கின்றார்கள். செல்லப்பாவின்மீது அவர்களுக்கு மிகுந்த துவேஷமும் ஆக்ரோஷமும் உண்டாய் "அவனுக்கு எப்போது தூக்குத் தண்டனையாகும்? அவன் என்று பழிக்குப் பழி வாங்கப்படுவான்?" என்று வெகு ஆத்திரத்தோடு எதிர்பார்த்து அவனுடைய வழக்கைச் சீக்கிரத்தில் எடுத்துக் கொண்டு நடத்தும்படி பெரிய வக்கீல்களிடமும் மற்றவர்களிடமும் கூறிப் பதறுகிறார்கள்.

காந்தாமணியின் தந்தை அவள்மீது மிகுந்த பக்ஷம் வைத்துவிட்டாராகையால் அவருக்கு அவளைப் பிரிந்த ஏக்க மதிகரித்தது

பின்பு அவர்க்குப் பாரிசவாயுவு கண்டு கைகால்கள்விழுந்தன. அப்பால் நாத்தழுதழுத்துப் பேசுவதே புரியாவிதமாக மாறிவிட்டது. ஒரு மாதத்திற்குள்ளாக அவளது தாயார் இதே விசனத்தில் உயிர் துறந்துவிட்டாள். பாரிசவாயுவுடன் கிடப்பவரைச் சம்ரக்ஷணை செய்வதற்குத் திக்கில்லாமற் போய்விட்டது. இவருடைய ஒன்றுவிட்டுத் தங்கையின் குமாரன் புனவில் இருந்துவந்தான். அவன் இந்தச் செய்தியைக் கேட்டு இங்கு வந்து தான் மாமாவை ஆதரிப்பதாகக் கூறி மிகுந்த பிரியத்துடன் அவர்கள் வீட்டில் சகல வேலைகளையும் தானே பார்த்துவந்தான். இவனுக்குப் புனவில் கடன் அதிகமாயிருந்தது. அவற்றையெல்லாம் இவர்களுடைய பணத்திலிருந்து கொடுத்து தாம்தூம் என்று செலவு செய்து வந்தான். பிறகு சில தினங்களில் பாரிசவாயுவு கண்ட மனிதரை, ஆஸ்பத்திரிக்குப் போனால் வியாதி அநுகூலமாய்விடும் என்று கூறி ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் விட்டுவிட்டு இவன் தன் மனம் போனபடியே பணத்தை வாரி இரைத்துத் தலைகால் தெரியாமல் செலவிட்டான். அவர்கள் சேர்த்து வைத்திருந்த பணத்தை யெல்லாம் அநேக தாசிகளுக்கும், வேசிகளுக்கும், சிநேகிதர்களுக்கும் கொட்டிக் கொடுத்தான். தினம்விருந்தும் கச்சேரிகளும் வைத்தான்; அந்த சொத்திற்குத்தானே வார்சுதாரனுய் எண்ணிக்கொண்டான்; இனிமேல் இதை எவ்விதம் செலவிட்டாலும் நம்மைக் கேட்பாரே இல்லைஎன்ற தைரியங்கொண்டுஅபரிமிதமாகச் செலவிட்டான். இவர்கள் வீட்டில் ரொக்கமாக வைத்திருந்த பணத்தை 15 தினத்தில் தாம்தூம் செய்துவிட்டுப் பாங்கியில் கட்டியிருந்த தொகையையும் வாங்கிச் செலவிட்டு இரண்டுமாத காலத்தில் பாதிக்குமேல் பணத்தைக் காலி செய்துவிட்டான். இவனுடைய அட்டகாசத்தை யறிந்த சில துஷ்டர்கள் தாங்கள் காந்தாமணியின் தந்தைக்குப்பணம் கடன் கொடுத்ததாகப் பொய்க் கையொப்பதுடன் சீட்டுக் காட்டி பணத்தைப் பறிக்கத் தலைபட்டு விட்டார்கள். இவ்விதமே இவன் வந்தவளவில் பணத்தைப் பெரும்பாகமும் துடைத்துவிட்டான்.

இவனைப்போல் இன்னும் சிலர் ''நாங்களும் காந்தாமணிக்கு உறவினர்; இறந்த அம்மாள் எமது அத்தையாக வேண்டும்'!என்று பொய்யாக உறவு வைத்துக்கொண்டு வந்து சேர்ந்து இவனுடன் கூடித் தின்று உருட்டத் தலைப்பட்டார்கள்.

ஆஸ்பத்திரிக்குச் சென்றவர்க்குக் குணமே ஏற்படாமையால் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். அவருடைய பணத்தையெல்லாம் கொள்ளையடிக்கும் மனிதர்கள் அவரைக் கவனியாமல் கைவிட்டு விட்டார்கள். இவருக்குத் தினம் சோறு கிடைப்பதும் துர்லபமாய் விட்டது. முன்னுலிருந்த பணிமக்கள் எல்லோரையும் துரத்திப் புதியவர்களாய் இவர்கள் அமர்த்திக் கொண்டார்கள். புதிய பணி மக்களும் இவர்களுடன் சேர்ந்து கிழவரைக் கவனியாமல் பரா முகமாயிருந்துவிட்டார்கள். கிழவருக்கு வாய் பேசுவதற் குக்கூட அடியோடு முடியாமற் போய்விட்டபடியால் அவருடன் யாரும் பேசுவதுமில்லை. அவர் பேசுவதும் புரிவதில்லை. அவர்க்குத் தம்முடைய துயரத்தை வெளியே கூறுவதற்கும்இயலவில்லை. தாம் யாரிடம் கூறுவது? தம்மை லக்ஷ்யம் செய்து யார் பேசுகிறுர்கள்? தம்முடைய நண்பர்களை வரவழைப்பதற்குமில்லை. இங்கு தர்பார் வேருக மாறிவிட்டது! தமக்கு இந்நிலை வருமென்றுஇரண்டு மாதத் திற்கு முன்னுல் அவர் எண்ணியவரன்று. அத்தகைய மனித ருக்குத் திடீரென்று இவ்விதம் ஆபத்துவரவே, அவர் அதனுல் தாங்கமாட்டாத துக்கமடைந்து கலங்கித் தமக்குள் புலம்புகிறுர்.

இவருடைய சினேகிதர்கள் யாரேனும் இவரைப் பார்க்க வந்து கேட்டால் பார்க்கமுடியாதென்று புதிய எஜமானனை **ஜீவநாதன்** கூறி அவர்களை உள்ளே வரவிடாது அனுப்பிவந்தான். இச்செய்திகளை நோயாளி அறியமாட்டாராகையால் தமக்கு நோய் கொண்ட இந்த நிலைமையில் தாம் தம்மை வஞ்சித்து உறவு கொண்டாடி மோசம் செய்யவந்த மனிதன் கீழ் அடிமைபோ லிருக்க நேர்ந்த இச்சமயம் தம்மை தம் உறவினர் யாரும் எட்டிப் பாராதிருப்பது அவருக்குச் சொல்லமுடியாத துயரத்தைத் தந் தது. "ஆஹா! நமது புதல்வி இறந்த அன்றே நமக்குச் சனியன் பிடித்து விட்டது! மகாலக்ஷ்மிபோன்ற நமது காந்தா இறந் ததும் அன்றே இலக்குமியும் விலகி விட்டாள் போலும். ஐயோ! என் கண்மணி காந்தா இறக்கவும், இந்த துன்மார்க் கன் வந்து சேரவும், என்னை அன்பாயுபசரித்த மனைவி உயிர் நீங்கவும், நான் இவ்விதம் நோய் கொண்டு ஹிம்சைப்படவும், என்னையே வஞ்சித்து என் பொருளை யெல்லாம் ஒரு நொடி

யில் பஞ்சுப்புதரில் தீப்பொரி வைத்ததுபோல பஸ்மீகரம் செய்வதுமல்லாமல் என்னையும் கேவலமான அநாதிப் பிணம்போல் செய்துவிடவும் காலம் வந்ததே! நான் செய்த பாபமென்னவோ ? அந்தோ! இத்துயரத்தை நான் எவ்விதம் தாங்குவேன் ! ஐயோ ! எனக்கு வந்த துன்பம் எல்லாம் போதாமல் வாயையும் ஈசன் சூனியமாக்கி விடவேண்டுமா? எனக்கு வாயற்று விட்டதனுலன்றோ என் கதி கேவலம் அதோகதியாய் விட்டது. ஐயோ ! என்னுடைய நிலைமை ஊமையனுடைய கதிபோலல்லவா ஆய்விட்டது. ஆ ! அந்தப்பாவியின் அட்டூழியத்தை எடுத்துரைத்து அவனைக் கண்டிக்க முடியாமல் என்வாயை அடக்கிவிட்டானே ஈசன்! ஐயோ !நான் என்னென்று அழுவேன்?யாரிடம் முறையிடுவேன்?'' என்று கலங்கித் தவித்து உருகிக் கண்ணீர் விடுகிருர்.

இவருக்கு ஜீவநாதன் ஊர்மேச்ச நாட்டுமருந்துகள்,எண்ணெய்கள் வாங்கிக் கொடுத்துவந்தான். முதலியாரை இவ்விடத்தை விட்டே அப்புறப்படுத்தி விட்டால் தம்முடைய நாடகத்திற்கு இன்னும் அநுகூலமேற்படுமென்று எண்ணியவனுய் அவரைத் தான் முன்னுவிருந்த புனுவுக்குத் தனதாள் மூலமாக அனுப்பிவிட்டான்.

அவர் வீட்டை விட்டுச்சென்ற பின்னர் “அவர் எங்கே! உடம்பு எவ்வித இருக்கின்றதென்று கேட்போர்க்கு அவர் மருந்து சாப்பிட அயலூருக்குச் சென்றிருப்பதாய்ச் சிலரிடமும், சிலரிடம் இறந்துவிட்டார் என்றும் கூறிவந்தான். செல்லப்பாவின் அப்பீல் முடிவு தெரிவதற்கு முன்னமேயே, அவரை இடம் மாற்றி விட்டான்.

....

இது இங்ஙனமிருக்கச் சுந்தரன் பாலக்கோட்டையைத்தேடிக் கொண்டு ப்ரயாணப்பட்டு அவ்வூரையடைந்தான். அது அவனுக்கு திக்குத்தெரியாத புதிய ஊராகையால், அவன் எந்த இடத்துக்குச் சென்று பத்மவல்லியைக் காண்பான் ? அவள் உயிருடன் இருப்பதுமில்லாததும் சந்தேகமாய் எழுதப்பட்டிருந்ததேயன்றி உண்மை தெரியவில்லையே ? இந்தச் சந்தேகத்தை முதலில் யார் நிவர்த்தி செய்வார்கள் ? “ஐயோ ! கண்மணி ! உன்னைக்காணுது வாடியலையும் எனக்கு நீ யிருப்பிடத்தை யாரேனும் தெரிவிக்கமாட்

டார்களா? என் கலக்கத்தைப் போக்கி உன் தரிசனம் கிடைக்கும் படியாகச் செய்ய யாரும் முன்வரமாட்டார்களா? ஐயோ! பத்மம்! "தாங்கள் சீக்கிரம் வந்து விடுங்கள்" என்று எனக்குத் திட்டம் செய்துவிட்டு நீ எவ்விதம் மாயமாய் மறைந்து விட்டாய்? என் கண்ணே! அன்று நாம் பேசியிருந்த தருணம் கதவைத் தாளிட்டது பற்றி நான் சந்தேகித்து உண்மையறியாமற் கலங்கிச் சென்றது உண்மையாகவேமுடிந்துவிட்டதே! காந்தாமணியின் சவத்தை அங்குவைக்கும் பொருட்டாக யாரோ வந்திருந்தவர்கள் உன்னையும் என்னவோ செய்துவிட்டார்களேயன்றி வேறு இதில் சந்தேகமே கொள்ள இடமில்லை. என்னை இவ்வளவு தூரம் நம்பியுள்ளவர்களிடத்தில் நான் என்னுடைய இரகஸியச் செய்தியை எவ்வித முரைப்பேன்? அதை மறைத்தால் என்னைப்பற்றி என்ன எண்ணுவார்கள்? ஐயோ! இருதலைக்கொள்ளி எறும்பாய்விட்டேனே! பத்மவல்லி! உன்னுடையமுகத்தைக் காணுமல் என்னுயிர் நாளுக்கு நாள் மெலிந்து பாகாயுருகி அலைகின்றதே! என்ன செய்வேன்?" என்று கலங்கித் தவித்தான். அவளைதான் எவ்விதம் காண்பதென்று வெகு நேரம் யோசித்தான். கடைசியில் ஒரு உறுதிக்கு வந்து, அவன் பாலக்கோட்டைப்பட்டணத்தில்ஒரு பெரியகூட்டங் கூடும்படியான மண்டபமொன்றை வாடகைக்கு வைத்துக்கொண்டான்.

பத்மவல்லியின் புகைப்படத்தை எடுத்துக்கொண்டு பெரிய சித்திரக்காரன் இருக்குமிடத்தை விசாரித்து அங்குச் சென்று "இப்படத்தைப்போல் பெரிய உருவத்தில் ஒன்று செய்து தர வேண்டும். வேலை அவசரமாக ஆகவேண்டும். இன்னும் 3, 4, நாட்களில் முடித்துக் கொடுத்தால் ஏராளமான வெகுமானம் தருவேன்" என்று கூறிப் படத்தைக் கொடுத்தான்.

சித்திரக்காரனும் படத்தை வாங்கிக்கொண்டு இரவு பகலாக உட்கார்ந்து அதேகாரியமாயிருந்து வேலையை வெகு திறமையாக முடிதது 5-வது நாளில் படத்தை எழுதிக் கொடுத்துவிட்டான்.

சுந்தரன் அதை வாங்கிக்கொண்டு அந்தச் சித்திரக்காரனுக்கு ஏராளமான சன்மானங் கொடுத்துவிட்டு, அவனுல் தயார் செய்யப்பட்டு வைத்திருந்த இன்னும் அனேகவிதமான படங்களையும் வாட

கைக்குப் பெற்று, அவன் மூலமாய் இன்னும் அநேக சித்திரக் காரர்களிடம் சென்று அநேகம் படங்களை வாங்கி அவைகளைக் கொணர்ந்துதான் வாடகைக்கு வாங்கியுள்ளமண்டபத்தில் வரிசைக் கிரமமாக மாட்டி அலங்கரித்து, படமெழுதிய சித்திரக்காரர் களையே, தனக்கு உதவிக்கு வைத்துக்கொண்டு, "இன்று முதல் 7 நாள் வரையில் சித்திரப்படக்காட்சிச் சாலையில் வேடிக் கைக் கொண்டாட்டம்; எல்லோரும் இனமாகப் பார்க்கலாம்" என்று விளம்பரம் செய்து விட்டான்.

அவ்விதம் செய்வதில் அவனுடைய நோக்கமாவது.—இவ்வூரி லிருந்து நாயுடு கடிதமெழுதி யிருக்கிறார். ஆகையால் நாயுடுவும் இவ்வூரில்தா னிருக்கவேண்டும். மேலும் பத்மவல்லி உயிருடன் இருப்பதாகத் தெரிகிறதென்று நாயுடு எழுதி யிருப்பதிலிருந்து அவர் இந்த ஊரில்தான் அவளைப்பற்றிச்சந்தேகித்து எழுதியிருக்க வேண்டும். அப்படி யவள் இங்கு இருப்பாளேயானால் இந்த ஊரி லுள்ள இத்தனை ஜனங்களில் யாரேனும் அவளைப் பார்த்தவர்களோ அல்லது அவளை நன்றாகத் தெரிந்தவர்களோ இப்படத்தைப் பார்ப்பார்களே யானால் அவர்கள் இதைப்பற்றி ஏதேனும் கூறாம விரார்கள். நாம் சென்னையில் படக்காட்சிச் சாலையில் பார்த்தகாலத் தில் அங்கிருந்தபடங்களில் ஏதேனும் தமக்குத் தெரிந்த மனிதரின் சாயல்போலத்தோன்றுமாயின் அதைக்கண்டவர்கள் பலமாதிரிபேசு வதை நாம் கவனித்திருக்கிறோம். அதேபோல் அவளையறிந்த மனிதர்கள் யாரேனும் இதைப்பார்த்துப் பேசுவார்களே யானால் அவர்களை விசாரித்து அவர்கள் மூலமாய் ஏதேனும் புலன் கிடைக் குமோ என்பதே முக்கிய நோக்கம். அதோடு நாயுடுவையும் இவ் விடத்தில் காண நேரலாம். எவ்விதத்திலேனும் தனக்கு ஏதாகி லும் வழி ஏற்படக்கூடும்" என்று எண்ணிக் கடவுளை வேண்டிக் கொண்டு சித்திரப்படக் காட்சிச்சாலையைத் திறந்தான்.

இவன் செய்துள்ள விளம்பரங்களைக் கண்டு காலை 10-மணி முதல் கும்பல் கும்பலாக ஆண்பாலரும், பெண்பாலரும், சிறு பிள்ளைகளும் வந்து காட்சியைக் கண்டு களித்துத் தமக்குத் தோன் றியவாறு பேசிக்கொண்டே செல்கிறார்கள். மாலை ஆறுமணி வரை யில் மண்டபத்தில் எள்ளிட இடமில்லை. சுந்தரனும் கூடவே அந்த

மண்டபத்தில் யார் என்ன பேசுகிறார்கள் என்பதைச் சூக்ஷ்மமாகக் கவனித்துக்கொண்டே வருகிறான். ஒவ்வொரு படத்தையும் பார்க்கும் ஜனங்கள் அதனழகைக் கண்டு வியந்து பலவாறாகக் கூறுவதும், பத்மவல்லியின்படத்தைக்கண்டு "தேவமாது என்று புகழத்தக்க ரூபலாவண்யமுள்ள இந்தப் பாவை உயிருடன் இருப்பாளேயானால் அவளைத் தரிசிப்பவர்க்குப் புண்யமுண்டாம். ஆஹா! இவளது புருவ வில்லினழகையும் பிறைச்சந்திரன் போன்ற நெற்றியினழகையும் எவ்விதம் தான் எழுதினாரோ!" என்று வியந்து கூறி வெகு நேரம் பார்த்துவிட்டுச் செல்கிறார்கள். இவ்விதமே இரண்டு நாட்கள் கழிந்துவிட்டன. அவனுக்கு ஒருவிதத் தகவலும் தெரியவில்லை. அவன் அதே ஏக்கமாகத் துடிக்கின்றான். "என்னடா செய்வோம்? முகமறியாத இந்த ஊரில் ஜனங்களைத் திரட்டி அவர்களின் வாக்கினால் ஏதேனும் பலன் கிடைக்க எண்ணியதும் வீணாயிற்றே! இவ்விதமே பலன் கிடைக்காமல் நாம் எத்தனை நாளைக்குத்தா னிருப்பது? வேறு வழி எதுவும் செய்யாமலிருப்பதா?" என்ற வேதனை பட்டுக்கொண்டு இரவும் பகலும் துடித்துக்கொண் டிருக்கிறான்.

மறுநாள் பிற்பகல் பத்மவல்லியின் படத்தையும் அதற்குப் பக்கலிலிருக்கும் ஒரு குழந்தையின் படத்தையும் பார்த்த இரண்டு ஸ்திரீகளுள் ஒருத்தி "அடீ! சிங்காரம்! இந்தக் குழந்தையின் படத்தைப் பார்த்தால் நம்முடைய பிச்சுமணியின் குழந்தையைப் போலவே இருக்கின்றது பார்த்தாயா! ஆஹா! அதையே படம் எடுத்தார்களோ?" என்று மற்றவளைக் கேட்டாள்.

சிங்காரம்:—அப்படித் தான் நானும் முதலிலேயே நினைத்தேன். இதோ! இந்தப் படத்தைப் பார்த்தாயா! அடடா! தத்ரூபம் அந்தப் பெண்ணைப்போலவே இருக்கின்றதே!

தங்கம்மாள்:—எந்தப் பெண்ணைப்போல் இருக்கிறது?

சிங்காரம்:—நாம் சில தினங்களுக்கு முன் மாலை நேரத்தில் தாமரைக்குளத்து வழியாக வண்டியில் வரும்போது அந்தக் குளத்தில் விழுந்துவிட்ட ஒரு பெண்மணியை உடனே நம்முடைய பிதா வண்டியிலிருந்து இறங்கி எடுத்துக் கரைமீது போட்டாரே!

அந்தப் பெண்மணியைப் போலவே—இல்லையா! இந்தப் படம் அவளுடைய படமே தான். உடனே அவளுக்கு ப்ரக்ஞை தெளிவதற்குள் அவளுடைய சொந்தக்காரர் வந்து அப்பாவுக்கு உபசாரவார்த்தைகளைக் கூறிவிட்டு வண்டியில் அவளைப் போட்டுக் கொண்டு போனாரே! இப்படம் அவளையே வைத்து எடுத்ததாகவே தெரிகிறது. தலைமயிர், கண்ணின்விசாலம், இடை முதலியவற்றைப்பாரு; நன்றாய்த் தெரியும். அந்தப் பெண்ணின் பெயர் பங்கஜமென்று சொல்லவில்லையா? இது கட்டாயம் அவளுடையது போலவே இருக்கிறது.

தங்கம்:—நீ சொல்வது வேடிக்கையாக இருக்கிறதே. இந்தப் படமெல்லாம் மனிதர்களின் உருவமேயல்ல. சித்திரக்காரர்களுடைய கைத்திறமையைக் காட்டும் பொருட்டு எழுதி வைக்கப்பட்டவை. மனிதர்களைப்போல் மனிதர்கள் இருக்கமாட்டார்களா என்பதற்குமில்லை. இது ஒருவன் தன் கையினால் தானாக யோசித்து எழுதிய படமேயன்றிப் புகைப்படமல்ல. இதை எழுதியவன் வெகு திறமையோடும் சாமார்த்தியமாயும் எழுதியிருக்கிறான். நீ சொல்லும் பெண்மணி நல்ல அழகாக இருக்கலாம். அவளுடைய அழகிற்கும் இதனுடைய அழகிற்கும் சிறிது பொருத்தமிருக்கலாம். அவ்வளவேயன்றி இதை அவளுடைய படமென்று எவ்விதம் கூறலாம்?

சிங்காரம்:—அவளையும் நீ பார்த்திருந்தால் சொல்வாய். இதில் அவளுடைய பிம்பம் அப்படியே இருக்கின்றதேயன்றி வேறு மனிதர்போலத் தோன்றவே இல்லை. இதை யாரையேனும் கேட்டே தெரிந்துகொள்ளலாம்.

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சுந்தரன் தனக்குள் இன்னதுதான் என்று விவரிக்கவொண்ணாத எண்ணங்களை எண்ணுகிறான். "இவர்கள் கூறுவதிலிருந்து பத்மம் எங்கேயோ குளத்தில் விழுந்து பிழைத்திருப்பதாகத் தெரிகின்றதே! ஐயோ! சொந்தக்காரர் எடுத்துச்சென்றதாயும் சொன்னார்களே! மீண்டும் அவளை யாரோ எடுத்துச்சென்று என்ன செய்துவிட்டார்களோ தெரியவில்லையே! இதை நாம் யாரைக்கேட்டுத் தெரிந்துகொள்வது? இவர்களையே கேட்போமா! அவளை யார்கொண்டு போனார்

182839

கள்? எந்த இடத்திலிருப்பதாகச் சொன்னார்கள் என்பதைக் கேட்டுத் தெரிந்துகொள்வதே நலம்'' என்று தீர்மானித்தான். மீண்டும் அவன் ''பத்மம் குளத்தில் விழும்படியான தருணத்தில் எந்தவித ஆபத்தில் சிக்கித் தவித்தாளோ! ஐயோ! அவளுடைய உயிர் இருக்கின்றதோ, இல்லையோ என்று ஐயுற்றிருந்ததற்கு இவர்கள் கூறுவது இருப்பதாகவே நினைக்கும்படியாகத் தோன்றுகின்றதே! இவர்கள் அவளைக்கண்டது எத்தனை தினத்திற்கு முன்னமோ தெரியவில்லையே!'' என்று யோசித்துக்கொண்டிருக்கையில் அந்தப் பெண்பிள்ளைகள் சுந்தரனை நோக்கி, ''ஐயா! இப்படம் உண்மையான மனிதர்களின் உருவப்படமா அல்லது சாமர்த்தியத்தினால் வரையப்பட்டதா?'' என்றார்கள்.

சுந்தரன்:—ஏனம்மா! இதிலுள்ளதுபோல மனிதர்களைத் தாங்கள் நேரில் கண்டதுண்டோ?

சிங்காரம்:—கண்டதனால் தான் கேட்கிறோம். நாங்கள் இப்படத்தை உண்மையில் அந்தப் பெண்மணியின் படமென்றே எண்ணியிருக்கிறோம். இது உண்மையில் எப்படி?

சுந்தரன்:—தாங்கள் பார்த்ததாகக் கூறும் பெண்மணி எங்கிருந்தாள்? அவளுடைய இப்போதைய இருப்பிடம் எங்கிருக்கிறது? தாங்கள் அவளைப் பார்த்து எத்தனை தினங்களாயின?

சிங்காரம்:—நான் பார்த்தது சுமார் இருவாரத்திற்கு முன்னாவிருக்கலாம். தாங்கள் கேட்பதைப் பார்த்தால் இந்தப்படம் அவளுடையது தான் என்று தோன்றுகின்றதே! அவள் இருப்பிடம் இவ்வூரில் சின்னப்பிள்ளை வீதி 50-வது இலக்கமுள்ள வீடு என்று அவளுடைய மனிதன் கூறினான். தாங்களும் அவளை யறிவீர்களோ?

சுந்தரன்:—இல்லையம்மா! நானும் படக்காட்சி பார்க்க வந்தவனே. இது யாருடையதென்று எனக்குத் தெரியாது. இந்த ஊரிலிருக்கும் சித்திரக்காரன் வீட்டிலிருந்து இப்படம் கொண்டுவரப்பட்டதென்று கேள்வி. இப்படம் ஒருகால் அவன் வீட்டு மனிதர்களுடையதாக இருக்கலாமோ, அல்லது இவ்வூரிலிருக்கப்பட்ட அவனுக்குத் தெரிந்த யாரையேனும் எடுத்ததாக இருக்கலாமோ என்ற சந்தேகத்தினால் இந்த ஊரிலா அப்பெண்

மணி இருக்கிறுள் என்று கேட்டேன். எனக்கும் சித்திரம் எழுது வதில் மிக்க ஆசையுண்டு. நல்ல அழகுவாய்ந்த ஆடவரோ, பெண் மக்களோ, குழந்தைகளோ, அவர்களைப்பார்த்துப் பின் எழுதத் தொடங்கினுல் அவர்களுடைய சாயை விழாமல் சமுத்ரிகா லக்ஷணங் களை மட்டும் கவனித்து எழுதுவது சித்திரக்காரர்களுள் வழக்கம். இதை எழுதிய மனிதன் தாங்கள் கூறும் பெண்மணியைப் பார்த் திருக்கலாம். அதிரூபலாவண்ய மிருந்திருந்தமையால் சாயலையும் பதித்து எழுதியிருக்கலாம். ஏனம்மா ! அந்தப் பெண்மணி குளத் தில் விழுந்ததாகக் கூறிக்கொண்டீர்களே ! என்ன காரணத்தினுல் அவள் விழுந்து விட்டாள்? உங்களுக்குத் தெரியுமா ?''

சிங்காரம்:—எனக்குத் தெரியாது. நாங்கள் பக்கத்துக் கிரா மத்தில் ஒரு கலியாணத்திற்குப் போய்விட்டுத் திரும்பி வருகை யில் மாலை இருட்டும் சமயமாய் விட்டது. நாங்கள் குளக்கரை வழியாக வண்டியில் வரும்பொழுது ஒரு மடந்தை திடீரென விழுந்ததை அறிந்தோம். என் தகப்பனுர் ஓடிக் குளத்தில் இறங்கி எடுத்தார். அவள் அப்போது ப்ரக்ஞையற்றிருந்தாள். அவள் வெகு நாளாக நோயினுல் பாதைபட்டவள் போல மிகவும் இளைத்துத் துரும்பாக இருந்தாள். நோயின் பாதையால் விழுந்திருக்கலாம் என்று நாங்கள் எண்ணுகிறோம். உடனே ஒருவர் ஓடிவந்து அவளைத் தாம் வந்த வண்டியில் போட்டுக் கொண்டு போய்விட்டார். அவர் என் தந்தைக்கு உபசாரவார்த்தை கள் கூறியபோது அவருடைய இருப்பிடத்தையும், ஏன் விழுந்தாள் என்பதையும் என் பிதா கேட்டார். அதற்கவர் தான் அவளுடைய புருஷனென்றும், அவளுக்கு நெடுநாளாக வயிற்றுவலி என்றும் அதன்பாதையைத் தாங்காது தினம் குளத்தில் விழுவதாயும், கிணற் றில் விழுவதாயும் கூறிக்கொண்டே இருந்தாளென்றும், எத்தனை மருந்து கொடுத்தும் அந்தநோய் குணமாகவில்லை யென்றும், இந்த ஊரில் யாரோ ப்ரபல வைத்தியரும் மாந்திரீகரும் இருப்பதாகக் கேள்விப்பட்டு இங்கு அழைத்து வந்திருப்பதாகவும் மருந்து கொடுத்து வருவதாகவும் கூறி ''நானின்று முக்கிய காரியமாய் வெளியில் செல்வது அவசியமாய்விட்டது; சென்று திரும்பிவந்து பார்த்தால் அவளைக் காணவில்லை; உடனே தேடிக்கொண்டு ஓடிவந்

தேன். தாங்கள் மகானுபாவன் காப்பாற்றிக் கரைசேர்த்ததற்கு மிகுந்த வந்தனம்" என்றுவந்தனஞ்செய்து போய்விட்டார். பிறகு அவர்களிருப்பிடம் எங்களுக்குத் தெரியாது. அவளைப் பார்த்தேதான் எழுதியிருக்கலாமென்று நினைக்கிறேன்—என்றாள்.

இதைக் கேட்ட சுந்தரன் தன் காதலியின் உயிர் காப்பாற்றப்பட்டதை யெண்ணி மகிழ்ச்சியடைந்தான்; அவள் எவ்விதத் துன்பத்திலிருக்கிறாளோ என்ற வருத்தமுங் கொண்டான். அவர்கள் கூறிய விலாசத்தை நினைவு வைத்துக்கொண்டான். தான் அதற்கு மேலும் பேசுவது சந்தேகாஸ்பதமாய்விடும் என்று எண்ணியவனாய், "இருக்கலாம். அந்தம்மாளைப் பார்த்தவர்தான் இதையும் எழுதியிருக்கலாம் என நானும் நினைக்கிறேன்" என்று கூறி மெல்ல அப்புறம் போய்விட்டான்.

அவன் மனம் முற்றும், எவ்விதத்திலேனும் பத்மவல்லியைக் கண்டு பிடிக்கவே எண்ணியது. அன்று பிற்பகல் ஒருமனிதன் அப்படத்தைப் பார்த்துவிட்டு "ஆஹா! முல்லையூர் ஜமீந்தாரின் புதல்வியைப் போலவே இருக்கின்றாளே! ஐயோ! அவர்கள் கதியும் குடும்பமும் எவ்விதம் சீர் குலைந்து விட்டன?" என்று வருந்திக் கண்ணீர் பெருக்கினார். தூரத்திலிருந்தபடியே இதைக் கவனித்துக்கொண்டிருந்த சுந்தரன் அவரருகில் சென்று, "ஏனையா கண்ணீர் விடுகின்றீர்கள்?" என்று வினவினான்.

வந்தமனிதன்:—இந்தப் படத்தைப்பார்த்தால் என்னுடைய சினேகிதரும் என்குடும்பத்தைக் காத்தவருமாகிய முல்லையூர் ஜெமீந்தாரின் புதல்வியைப்போல இருக்கிறது. அவர்களது கதி அதோகதியானதை எண்ண வருத்தமுண்டாகின்றது. அவர்களுடைய சகல மேன்மைகளையும் நான் அறிவேன். அவருடைய பெண்குழந்தையையும் நானறிவேன். அதனால் அந்த நினைவு எனக்கு உண்டாயது.

சுந்தரன்:—ஏன் அவர்களுடைய கதிக்கு என்ன பங்கம் நேர்ந்தது ? அந்தப் பெண்மணி எங்கிருக்கிறாள்?

வந்தமனிதன்:—ஐயோ! அதைக் கூறவும் வேண்டுமா! எனக்கு இவ்வூர்தான் சொந்தஊர். நான் என்னுடைய சொந்த ஊருக்கு

நான்கு வருஷத்திற்கு முந்தித் தான் வந்தேன். எனக்கு அவர்களிடமிருந்து கடிதம் வந்து கொண்டே இருக்கும். சிலமாதமாக எனக்குச்சரியானபடி கடிதம் வராமையால் எனது வேறுசினேகிதர் மூலமாய் எழுதி விசாரித்ததில் (அங்கு நடந்த விவரங்களைக் கூறி) இச்செய்தி தெரியவந்தது. அது முதல் எனக்கு மிகுந்த கலக்கமாக இருக்கிறது. இந்தப் படத்தைப்பார்த்தால் அவளுடைய உருவம் போலவே இருக்கிறது. அவளை யாரோ அபகரித்துக்கொண்டு போனதாகத் தெரிகின்றதே! பாவிகள் எந்தச் சண்டாளர்கள் கறுவைத்துஇவ்விதமெல்லாம் செய்கிறார்களோ தெரியவில்லை!—என்று மீண்டும் கண்ணீர் விட்டார்.

சுந்தரன்:—இந்தப் படத்திலிருப்பவளை இந்த ஊரில் பார்த்ததாகச் சற்று முன் கூட யாரோ பேசிக்கொண்டிருந்தார்களே! தாங்கள் கூறுவதில் அவளை யாரோ அபகரித்ததாகச் சொல்கிறீர்களே?

வந்தமனிதன்:—என்ன! இந்த ஊரிலா? அதெல்லாம் வெறும் பேச்சு. எனக்குத் தெரிந்த வைத்தியரொருவரும் நானும் முந்தாநாளும் இப்படக்காட்சியைக் காண வந்திருந்தோம். அவர் இப்படத்தைக் கண்டதும் ஆச்சரியமடைந்து சமீபத்தில் தாம் இந்தப் படத்திலுள்ளவளுக்குச் சிகிச்சை செய்ததாகவும் அவள் இவ்வூரிலிருப்பதாகவும் கூறினர். இதைக் கேட்ட எனக்கு வியப்பின்மேல் வியப்பாய்விட்டது. "நீர்சொல்வது உண்மையா?" என்று தர்க்கித்தேன். அவர் "நான் அவளைப் பார்த்தது உண்மைதான்" என்று கூறினர். என்ன உடம்பு? எந்த விடம்? என்று நான் கேட்டதற்கு அவர், அவளுக்கு ஜுரம் அடித்து ஜன்னிகண்டு மெத்த ஆபத்தான தருவாயில் இருந்ததாயும் தான் மருந்து கொடுத்துச் சிகிச்சை செய்ததாகவும் கூறினர். பிறகு நான் அவளுடைய பூர்வீகத்தையும், அவள் யார் என்பதையும், தற்போது நடந்துள்ள விபரீதங்களையும் கூறி 'அவள் யாரோ அன்னியரான துன்மார்க்கரிடம் அகப்பட்டிருக்கிருள்; இருக்குமிடந் தெரியவில்லை. தாங்கள் உடனே அந்த இடத்தைக் காட்டவேண்டும்' என்று கேட்டதற்கு அவர் ஆச்சரியமடைந்து, உடனே என்னுடன் திரும்பினர். அவர் வைத்தியம்பார்த்த வீட்டிற்கு வண்டி வைத்துக்கொண்டு நாங்கள்

சென்றோம். அங்கு யாரையும் மனிதர்களையே காணோம். அவ்வீடு காலியாக இருந்தது கண்டு நாங்கள் திடுக்கிட்டுப் ப்ரமித்து விட்டோம். இங்கிருந்தவர்கள் எவ்விதம் சென்றிருப்பார்கள் என்று யோசித்துப் பக்கத்து வீட்டில் விசாரித்ததில் அவர்கள் தங்களுக்கு எதுவும் தெரியாதென்றும் அதில் அடிக்கடி யாரேனும் தங்கிச் செல்வது வழக்கமென்றும், அவ்விதம் செல்பவர்களை யெல்லாம் தாங்கள் கவனிப்பதில்லை என்றும் கூறிவிட்டார்கள். பிறகு நாங்கள் அன்றுமுற்றும், நேற்றுமுற்றும் அவருடைய வைத்தியத்தொழிலையும்விட்டு எங்களாலானமட்டும் தேடியும் விசாரித்தும், எங்கெங்கோ அலைந்து பார்த்தும் எங்கள் பிரயாசமெல்லாம் வீணாய்விட்டன. பிறகு நாங்கள் மனிதர்களைப்போல மனிதர்களிருக்கமாட்டார்களா! என்று எண்ணிப் பேசாமல் வந்துவிட்டோம். இச்சித்திரம் அவளுடைய சாயலாகவிருப்பதைப் பார்த்தால் அவள்தானோ!" என்றும் தோன்றுகின்றது. இனி அவளையும் காணப்போகிறோமா!" என்று வருத்தப்பட்டவண்ணம் படத்தைக் கொஞ்சநேரம் பார்த்துவிட்டுப் போய்விட்டார்.

இந்த நூதனமான வரலாற்றைக் கேட்ட சுந்தரனுக்கு இன்னுமதிகரித்த துக்கம் வந்துவிட்டது. "ஐயோ! இவர்கள் பார்த்ததெல்லாம் வீணாய் விட்டதாமே! அங்ஙனமிருக்க நான் எவ்விதம் தேடிக் கண்டு பிடிக்கப் போகின்றேன்? ஐயோ! பத்மா! உனக்கு ஜன்னிகண்டதாமே! அந்த ஆபத்திலிருந்து நீ தப்பினாயோ, இல்லையோ! முழு விவரமும் தெரியவில்லையே! நான் என்ன செய்வேன்?" என்று கண்ணீரைப் பெருக்கினான். பிறகு அன்று மாலை ஆறு மணிக்குக் காட்சிச்சாலை மூடப்பட்டது.

உடனே சுந்தரன் அன்று அந்தப் பெண்பிள்ளைகள் கொடுத்த விலாசத்தைத் தேடிக்கொண்டு பலபேர்களையும் விசாரித்தவாறு அலையத்தொடங்கி, சின்னப்பிள்ளை வீதியை இரவு எட்டு மணிக்கு அடைந்தான். அதில் 50-வது இலக்கமுள்ள வீடே எங்கும் காணப்படவில்லை. அவ்வீதியில் சுமார் 25 வீடுகளே காணப்பட்டன. "இங்கு 50-வது இலக்கமுள்ள வீடு எது?" என்று சுந்தரன் கேட்டுக் கொண்டே போனான். அங்கு அந்த இலக்கமுள்ள வீடே கிடையாதென்று தெருவார் கூறிவிட்டார்கள். இதைக் கேட்ட

சுந்தரன் மெத்த மனமுடைந்து "சின்னபிள்ளை வீதி என்பது இன்னும் வேறு எங்கேனுமுண்டோ?" என்பதையும் விசாரித்தான். அதுவுமில்லை என்று கூறிவிட்டார்கள். அவர்களிடம் அந்தத் திருடன் கூறிய விலாசம் வெறும் பொய்யென்றும் தான் சமயத்திற்கு எதையோ சொல்லித் தப்பித்துக்கொள்ளும் பொருட்டு அவ்விதம் கூறினன் என்றும் ஊகித்துக் கொண்டான். அவனுடைய உண்மையான இருப்பிடத்தைத் தான் எவ்வாறறிவது என்ற ஏக்கமே பெரிதாய்விட்டது. பத்மம் எப்படியும் இவ்வூரில் இருப்பதாக இன்று அவர்கள் கூறியதில் நன்ருகத் தெரிகிறது. ஆகையால் அவளை நாம் எவ்விதமேனும் பாடுபட்டுக் கண்டுபிடித்தே தீரவேண்டும் என்று துணிவு கொண்டான்.

அப்பொழுது மணி ஒன்பதுக்குமேலாய்விட்டதால் நன்ருக இருள் சூழ்ந்துகொண்டது. அதற்குமேலும் தான் எங்கு தேடுவதென்று ஏங்கித் தன்னிருப்பிடம் திரும்பினன். அன்று இரவு கழிய மறுநாட் காலையில் எழுந்தவுடன் தாமரைக்குளத்தை விசாரித்துக்கொண்டு அங்குச்செல்வதென்று தீர்மானித்து அவ்விடத்தை நோக்கி நடக்கலாயினன். "பத்மா குளத்தில் விழுவதற்குத் துணிந்து வந்திருக்கும்போது அவள் அந்தக் குளத்திற்குச் சமீபத்தில் தான் எங்கேனும் இருந்திருக்கவேண்டும். அவன் சின்னபிள்ளை வீதி என்று சொல்லியது சுத்தப் பொய். அதை நாம் யோசிக்காது நேற்று அலைந்தோம். திருட்டு மனிதன் தனதிருப்பிடத்தை உள்ளபடியுரைப்பானு? மேலும், அவ்வளவு தூரத்திலுள்ள வீட்டிலிருந்து அவள் எங்ஙனம் தப்பித்துக்கொண்டு இங்கு வந்து விழக்கூடும்? அதோடு நேற்று வைத்தியர் சென்று பார்த்த இடத்திற்கும் அந்தப் பெண்பிள்ளை சென்று பார்த்த இடத்திற்கும் பேதமிருக்கின்றது. வைத்தியன் தனதிருப்பிடத்தைத் தெரிந்து கொள்ளாமலிருக்கும்பொருட்டு அவளை அங்கு கொண்டுவந்திருக்க வேண்டும். காப்பாற்றியவர்கள் கேட்டதற்குப் பொய்விலாசமளித்திருக்கவேண்டும். ஆகையால் இந்தக் குளத்திற்குச் சமீபத்திலோ சற்று தூரத்திலோ தான் அவளிருக்கவேண்டும்" என்று யோசித்துக்கொண்டே நடக்கலாயினன்; வெகுதூரம் நடந்தபின் தாமரைக் குளத்தையடைந்தான். அக்குளம் மெத்த விசாலமாயும் அநேக

தாமரை இலைகளையும், புஷ்பங்களையும் தாங்கி அழகாக, தெள்ளிய நீருடன் விளங்குகின்றது. அந்தக் குளத்தின் கரைமீது ஓர் அரச மரமிருக்கிறது. அதனடியில் பிள்ளையார், நாகப்ரதிஷ்டைகள் முதலியன செய்து வைத்திருக்கின்றன. மற்றொரு பக்கத்தில் அடர்த்தியாக அனேக பனைமரங்களிருக்கின்றன. அவற்றில் சாணார்கள் இறக்கிக்கொண்டிருந்தார்கள். குளத்தில் சிலர் புஷ்பங்களையும் இலைகளையும் பறித்துக்கொண் டிருக்கிறார்கள். இவ்விதமிருப்பவர்களை யெல்லாம் கண்ட சுந்தரன் "இங்கு நிறைய ஜனங்களிருப்பதால் இவர்களை விசாரித்தால் அருகில் ஏதேனும் விசேஷமிருந்தால் தெரியவரும்" என்று எண்ணியவனாய்க் குளத்திலிறங்கித் தண்ணீர் குடிப்பதுபோல் குடித்து கரைமீது உட்கார்ந்தபடியே "ஏனப்பா! இந்தத் தாமரையை என்ன விலைக்குக் கொடுக்கின்றாய்? எங்கு கொண்டு விற்பனை செய்வாய்?" என்று புஷ்பம் பறிப்பவனைக் கேட்டான்.

இது கேட்ட அவன் "இது உண்ணம் ரவநேரத்திலே பறந்துபூடாதா! நூறு பூ எட்டணாக்கு குடுப்பேனுங்க. நமக்கு ஒண்ணும் கொறவு இல்லெங்க; இந்த பூ விக்கிரத்துக்கு இந்த ஊருக்குப் பக்கத்துலே எத்தினையோ ஊரு இருக்குது. அங்கே கொண்டுபோனாக்க ஒரு நொடியிலேயே அல்லாத்தையும் கோயிலுக்கு ஒரு மவாராஜா எடுத்துக்கினு என்னை யனுப்பிடுவாறு. தினம் ஓர் ஊருக்குக் கொண்டுபோனா அவங்களே எடுத்துக்குவாங்க. எஞ்சாமி! ஒங்களுக்கு ஒணுமா!" என்றான்.

சுந்தரன்:—எனக்கும் அகப்படுமா என்றுதான் கேட்டேன். இங்கு அருகில் ஊர்களிருப்பதாகச் சொன்னாயே! அங்கெல்லாம் நிறைய தனவந்தர்கள்தா னிருப்பார்களா? ஏழைகளும் இருப்பார்களா!

புஷ்பக்காரன்:—எஞ்சாமி! அல்லாரும் இருக்கிறாங்க. பணக்காரருக்கு மனம் வராது. ஐயா! ஏழைங்கதான் வாங்கிக் கோயிலில் சாமி பூஜைக்குக் குடுப்பாங்க. பணக்காரு வாங்கினாக்கா அதே தங்க ஊட்டு புள்ளைங்களுக்குக் குடுத்து பிச்சி எறியப் பாக்கராங்க. அவங்க வாசனை பார்த்து எறியராங்க; யாருண்ணாலும் மனந்தானே சாமி ஒணும்? ஒனக்கு எத்தினி பூ ஒணும்?

சுந்தரன்:—எனக்கு நூறு ஒனும்பா! எங்க ஊரு சென்ன பட்டணம். அங்கிருந்து எங்க மனிதர்கள் இந்தப் பாலக்கோட்டைக்குப் பக்கத்துக் கிராமத்திற்கு வந்திருக்கிறுங்க. அது எந்த ஊரென்பது எனக்குத் தெரியவில்லே. அவர்களுடைய இடத்தைத் தேடியே நான் திரிகிறேன். நீ புஷ்பம் விற்கும் ஊர்களில் யாரேனும் புதிய குடித்தனம் வந்திருக்காங்களா உனக்குத் தெரியுமா? அவர்கள் வரும்போது ஊரின் பெயர் திட்டமாக நான் கேட்கவில்லே. இப்போது முக்கியமான காரியமாய் அவர்களேப் பார்க்க வேண்டும். இடம் தெரியவில்லே. இந்த ஊரைச் சுற்றி அனேக கிராமங்களிருக்கின்றனவாம். அவர்கள் இவ்வூர் வைத்தியத்தில் பெயர்போன ஊரென்று வைத்தியத்திற்கு வந்தவர்களாகையால் அவர்களுக்கே முதலில் எந்தக் கிராமத்துக்குப் போவது என்பது தெரியவில்லே. வந்த பிறகும் கடிதம் வரவில்லே. நோயாளிக்கு உடம்பு எவ்விதமிருக்கிறதோ பார்க்கவேண்டும்.

புஷ்பக்காரன்:—எஞ்சாமி! இந்தப் பக்கத்து ஊர்லே ரொம்ப நோயிலே கடந்த ஒரு பொம்பளே முந்தாநேத்தி எறந்து பூட்டுது. அதுவாக்கிமா!

இதைக் கேட்டதும் சுந்தரன் தன்னேயே மறந்து "ஆ! என்ன! என்ன! இறந்துவிட்டதா! அவர்கள் அவ்வூருக்குப் புதிதாக வந்தவர்களா? அங்கேயே இருப்பவர்களா! இறந்தவளுக்கு எத்தனே வயதிருக்கும்?" என்று கலங்கியபடியே கேட்டான். இதைக் கேட்ட புஷ்பக்காரன் "எஞ்சாமி அழுவுரீங்க? ஒங்களுக்கு ரொம்ப சொந்த மனுசாளா அவுங்க? அவங்க வயித்தியத்துக்குத்தான் வந்தவங்கன்னு சொன்னுங்க. அந்தம்மாளுக்கு 20 வயசுகுள்ளாவே ஆவுதுன்னுங்க. அந்தம்மாளுக்கு ஆத்தா அப்பன் எல்லாரும் செத்தூட்டங்களாம். அவங்க மாமங்காரனும் புருசனும்தான் அடிச்சிகின்னு முட்டிகினு அயுதாங்க! ஐயோ! அந்தப்பொண்ணே நானும் செத்துக்கிடக்கச்செலே பாத்தேனுங்க. யம்மாடி பச்சகிளின்ன அதுகுதானுங்க செல்லும். ஐயோ! பால் வடிஞ்சமூஞ்சிலே மஞ்சாளும் குங்குமும் வெச்சு; சிங்காரம் செஞ்சிருந்துச்சி. என்ன அயவு! என்ன அயவு? என் வவுறு பத்திகிச்சு நான் அங்கே நின்று கதறிபுட்டேஞ்சாமி! அவ புருசனும் "ஐயோ!

எங்கண்ணே ! முத்தே ! ஒண்ணை மருந்து குடுக்க இட்டாந்து மடியவாச்சே! எண்ணெவுட்டு பூட்டையே ! என் கண்ணுமணி ! இண்ணு கதறிஞருசாமி! மாமங்காரனும் "எங்கையும் கண்ணும் இப்பிடியாபோவணும்" என்று" தலையிலே அடிச்சிகிணு அயுதாரு. உம். அவங்கதானு ஒங்கமனுசாளு?" என்று இவன் கூறிக்கொண்டு வருகையில் சுந்தரனின் துக்கம் இன்னும திகரித்துக் கொண்டே வந்தது. "ஐயோ! என் கண்ணே!" என்று வாய்விட்டுக்கூறினான். ஐயோ! இவன் சொல்வதையெல்லாம் பார்த்தால் என் பத்மவல்லிதான் இறந்துவிட்டாளோ! அவளுடைய துக்கம் தாங்காமல், ஆபத்தில் மீள வழியில்லாமையால் உயிரைத் துறந்து விட்டாளோ? ஐயோ! என் செய்வேன் ? என்னுயிர் துடிக்கின்றதே ! ஆ! பத்மவல்லி ! இத்தாமரையைப் பார்க்கையில் இது உன்னுடைய நினைவை எனக்கு அதிகமாகஉண்டாக்கி வருத்துகின்றதே! ஐயோ! ஹாஹா!........என்று தபிக்கின்றான். அவனுடைய நிலைமையைக் கண்டவர்கள் கலங்காமலிரார். அந்தோ! அவனுடைய பரிதாபத்தைக் கண்ட புஷ்பக்காரன் வருத்தத்துடன் "ஏஞ்சாமி! நீங்க அயுவுரத்தே பாத்தா செத்துட்டவங்கதான் உங்க மனுசாளுன்னு தெரியுதுங்களே! ஏஞ்சாமி! அந்தம்மா ஒங்களுக்கு எண்ணு ஒணும் ?" என்றான்.

சுந்தரன் "ஐயோ!...அ....வ....ள்........எ....ன்....னு....டை....ய...உயி...ர...ப்...பா!....அ....வ....ளை...ப்....பா....ர்...க்....கா....ம.....ல்...எ....ன்...னு...யி...ர்.....அ...ரை....நி....மி....ட....ம்....நி....ற்....கா....து....அ....வ...,ள்....எ....ன்....னு....டை...ட....ய...,ச....கோ...த....ரி...ஆ!....ப....த்....ம....வ...ல்...வி....எ...ன்....க...ண்....ணே!....இ.....ற...ந்....த....து...நீ.. ....தா...னே?.....யா.....ரோ?........தெ...ரி...ய....வி...ல்...லை....யே!........எ....ன்...ன...செ....ய்...வே...ன்?....ப....த்...ம....வ....ல்....லீ ! என்று கதறியபடியே அந்தக் குளத்துப் படிமீது சாய்ந்துவிட்டான். துயரம் மேல்பட்டதால் அவன் மூர்ச்சித்து விட்டான்.

இவன் கதறி விழுந்ததைக் கண்ட புஷ்பக்காரனும் இன்னு மற்ற அருகிலுள்ளோரும் "ஐயோ பாவம்! கூடப்பொறந்த பொறப்பில்லே ! அது நொம்பதுக்கம் வந்துட்டது. ஆசையிருந்தாக்கா

இப்படியல்லா இருக்கணும்'' என்று வியந்தவாறு குளத்திலுள்ள தண்ணீரை எடுத்துச் சுந்தரன் முகத்தில் தெளித்து ஒரு தாமரைத் துளிரை அவன் முகத்தில் ஜில்லென்று போட்டு விசிறினர்கள்.

சற்றுநேரத்தில் சுந்தரன் கண் திறந்து எழுந்து உட்கார்ந்தான். அவனல் துக்கம் தாங்க முடியவில்லை. அவன் பேச வாயெடுக்கிருன். பேச்சு மாறிப் புலம்பலாக வருகின்றது. அவன் எவ்விதமேனும் அந்த இடத்திற்குச் சென்று இறந்தவள் பத்மவல்லிதாளு என்பதைத் தீர விசாரித்துக்கொண்டு வரவேண்டும்என்றும்மாமன் என்றும் புருஷன் என்றும் நடித்தவர்கள் எந்தப் பாதகர்கள் என்று கண்டு பிடித்து அவர்களைப் போலீஸில் வைக்கவேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டான்.

பின் அவன், மெல்லத் தன்னைத் தேற்றிக்கொண்டு " அப்பா புஷ்பக்காரா! அந்தப்பெண் இறந்த பிறகு அந்த மனிதர்கள் அங்கு தானிருக்கிருர்களா;வெளியூருக்குப்போய்விட்டார்களா?'' என்ருன்.

புஷ்பக்காரன்:—நேத்து இருந்தாங்க சாமி! இண்ணைக்குத் தெரியாதுங்க.

சுந்தரன்:—அப்பா! என்னை அந்த இடத்திற்கு அழைத்துச் செல்கிருயா! உனக்கு மிகுந்தபுண்ணியமுண்டு—என்ருன். உடனே அவன் அதற்கிணங்கி, புஷ்பத்தையும், இலைகளையும் கட்டி எடுத்துக்கொண்டு சுந்தரனை அழைத்துக்கொண்டு செல்லலாயினன். கால் மைல் தூரம் சென்றதும் ஒரு சிறிய கிராமமிருந்தது. அங்கு சென்று ஒரு வீட்டைக் காட்டி "இந்த வீட்டில்தாஞ்சாமி எறந்துட்டது'' என்ருன்.

இதுகேட்ட சுந்தரன் "ஐயோ! அவர்கள் பத்மத்தைக் குளத்தில் விழக்கண்டதாகக் கூறியதற்கும் மிகவும் அருகாமையிலுள்ள இவ்விடத்திற்கும் பார்த்தால் இறந்தவள் பத்மவல்லியாகத்தானிருக்கும்போலிருக்கிறதே? அவள் தனக்குத்தப்ப வேறு வழியின்றி உயிரைவிட்டுவிட்டாளோ? அவளை அபகரித்துவிட்டவர்களே உறவினர்போல நடித்திருப்பார்களா!'' என்று எண்ணமிட்ட வண்ணம் சென்று வீட்டையடைந்ததும், வாசலில் ஒரு வயோதிகர் உட்கார்ந்

திருந்தார். அவரைக் கண்ட சுந்தரன் "ஐயா! தாம் தான் இவ் வீட்டுக்காரரோ?" என்று கேட்டான்.

கிழவர்:—நானல்ல. பக்கத்து வீட்டுக்காரர்தான் இதற்குச் சொந்தக்காரர். நான் நேற்றுத் தான் இந்த வீட்டிற்குக் குடிக் கூலிக்கு வந்தேன். ஏன் தாங்கள் யாரைத் தேடுகின்றீர்கள்?

சுந்தரன்:—இதில் முன்னுள் குடித்தனமிருந்தவர்களைத் தேடு கிறேன். அவர்கள் எங்கு சென்றார்கள் தெரியுமா? தெரிந்தால் தயவு செய்து சொல்லுங்கள்.

கிழவர்:—இந்த வீட்டில் முன்னிருந்தவர்கள் ஏதோ சிலமாதங் களுக்கு வாடகைக்கு வந்தார்களாம். அவர்களுடைய வீட்டில் ஒரு பெண் பிள்ளை மூன்றும் நாள் இறந்துவிட்டதாம். அந்தப் பெண்ணுக் காகத்தான் அவர்கள் இங்கு வந்தார்களாம். அவள் இறந்துவிட்ட தனுல் நேற்றுப் பகலிலேயே வீட்டைக் காலி செய்துகொண்டு வெளியூருக்குப் போய்விட்டார்கள். எந்த ஊருக்குப் போனார்க ளென்பது எனக்குத் தெரியாது. அவர்கள் துக்கத்தில் செல்லும் போது நாம் அதைக் கேட்பது அழகல்லவென்று வீட்டுக்காரரும் பேசாதிருந்து விட்டாராம். அவர்கள் அதிகமாகக் குடிக்கூலி கொடுத்துவிட்டார்களாம். அதைத் திருப்பியனுப்ப விலாசம் தெரிய வில்லையே யென்று அவரும் தவித்தார்'—என்றார்.

இதைக் கேட்ட சுந்தரனுக்குச் சந்தேகம் இன்னுமதி கரித்துவிட்டது. "ஐயோ! இவர்கள் கூறுவதிலிருந்து பத்மம் தானே என்ற எண்ணம் அதிகரிக்கின்றதே! என்ன செய்வேன்?" என்று சற்றுத் தயங்கினுன். மீண்டும் தான் அங்கு எவரை என்ன விசாரிப்பது என்று யோசித்தபடியே கிழவரிடம் சொல்லிக் கொண்டு திரும்பிவிட்டான். அவன் தனது துயரத்தை அடக்க மாட்டாமல் விம்மி விம்மிப் புலம்பியவாறு தள்ளாடித் தள்ளாடி நடந்தபடியே பூக்காரனிடமும் கூறிக்கொண்டு வந்தவழியே திரும்பி நடக்கலாயினுன்.

காலை ஐந்து மணிக்குக் கிளம்பியவன் சுமார் பத்துமணிக்குத் தன்னிருப்பிடத்தை யடைந்தான். அவனுக்கு இதுகாறும் பத் மாவை என்று காண்போம், அவள் எங்கிருப்பாள் என்ற எண்ணம்

மட்டும் போராடி வதைத்துக்கொண்டிருந்தது. இன்று சென்ற விடத்தில் கேட்ட செய்தியால் அவன் கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டான். அவன் கண்களில் நீர் பெருகியவண்ணமே இருக்கிறது. அன்று காட்சிச் சாலையைத் திறக்கவேண்டுமென்ற எண்ணத்தையே அவன் மறந்தான்; அவனுடைய துயரத்தில் அன்று சாப்பாட்டையும் மறந்து சோகமுற்றபடியே படுத்துவிட்டான்.

வழக்கம்போல் காட்சிச் சாலை அன்றும் திறந்திருக்குமென்றெண்ணி ஜனங்கள் திரள் திரளாக வந்துவிட்டார்கள். சித்திரக்காரர்களும் காட்சிச்சாலைக்கு வந்து பார்த்துக் கதவு திறக்காமல் மூடியிருக்கக் கண்டு வியப்புற்றுச் சுந்தரன் இருப்பிடத்திற்குச் சென்று பார்க்கையில் அவன் கண்ணை விழியாமல் படுத்துப் புலம்புவதைக் கண்டு திடுக்கிட்டு, "என்ன விசேஷம்? ஏன் இவ்விதம் கலங்கியவாறு படுத்திருக்கிறீர்களே? காட்சிச் சாலையை ஏன் இன்னும் திறக்கவில்லை? ஜனங்கள் மண்டபத்தின் வாயிலில் நிறைந்துவிட்டார்களே! தங்களுக்கென்ன தேக அசௌக்கியமா?" என்று கேட்டார்கள்.

சுந்தரனுக்கு அப்போது தான் காட்சிச் சாலையைத் திறக்கவில்லை என்பது நினைவிற்கு வந்தது. 'தான் விசனக்கடலில் ஆழ்ந்து படுத்திருப்பது பற்றி அவர்கள் என்ன எண்ணுவார்களோ!' என்று எண்ணி வருந்தியபடி எழுந்து உட்கார்ந்தான். வந்தவர்களை உபசரித்து உட்காரவைத்து "எனக்கு உடம்பு சரியாகவில்லை. இரவு முதல் தலை வலி அதிகமாக இருப்பதுடன் கண்ணில் எரிச்சலும் நீர் பெருகுவதுமா யிருக்கிறது. அதோடு ஜுரம் அடிக்கின்றது. எழுந்திருக்க முடியவில்லை. என் தேகபாதையில் காட்சிச் சாலையின் நினைவே இல்லாமற் போய்விட்டது. இதோ இச்சாவியைக் கொண்டு தாங்களே திறந்து பார்த்துக்கொள்ளுங்கள். நான் சற்று நேரங் கழித்து வருகிறேன்" என்று கூறிச் சாவியை அவர்களிடம் கொடுத்தான். சாவியை வாங்கிக்கொண்ட சித்திரக்காராகள் காட்சிச் சாலையைத் திறந்தார்கள்.

வீதியிலிருக்கும் ஜனங்களெல்லாம் கடந்த நாட்களைப் போலவே உட்சென்று பார்த்துக் களித்து வந்துகொண்டே யிருந்தார்கள். சுந்தரன் பிற்பகல் 3 மணிக்கு மெல்ல எழுந்து அவ்விடத்

திற்கு வந்துசேர்ந்தான். அங்கு மாட்டப்பட்டிருக்கும் பத்மவல்லியின் படத்தைப் பார்க்கப் பார்க்க வருத்தம் அவனது தொண்டையை அடைக்கின்றது. அவன் தனக்குள் புலம்பிக்கொண்டே உட்கார்ந்திருக்கிறான்.

பகல் நான்கு மணி சுமாருக்கு அங்கு இரண்டு வாலிபர்கள் படங்களைப் பார்த்துக்கொண்டே வருகையில் பத்மாவின் படத்தைப் பார்த்து பிரமித்து நின்றுவிட்டார்கள். அவ்விருவரும் தமக்குள் ஏதோ ரகஸியம் பேசிக்கொண்டார்கள். "இவர்கள் அப்படத்தைக் கண்டு ஏதோ பேசுகிறார்களே! என்னவிருக்கும்?" என்று எண்ணிச் சுந்தரன் ஜாடையாகப் படத்தருகில் வந்தான். இதற்குள் அவர்கள் பேச்சை நிறுத்திவிட்டுப்படத்தையே உற்றுக் கவனித்தார்கள்.

சுந்தரன் மீண்டும் அங்கு அருகிலேயே நாற்காலியில் உட்கார்ந்தான். இதற்குள் அவர்களுள் ஒருவன் சுந்தரனைப் பார்த்து இச்சாலையின் சொந்தக்காரர்கள் யார்?" என்றான்.

சுந்தரன்:—சொந்தக்காரர் தற்போது வெளியே சென்றிருக்கின்றார். அவருக்குப் பதிலாகவே நான் உட்கார்ந்திருக்கிறேன். ஏன் எதற்குக் கேட்கிறீர்கள்?

வாலிபன்:—(பத்மவல்லியின் படத்தைக்காட்டி) இப்படத்தை விலைக்குக் கொடுப்பதுண்டா? அப்படியாயின் அதற்குள்ள கட்டணத்தை நான் கொடுத்து வாங்கிக்கொள்கிறேன். இதன் விலை என்னவாகின்றது?

சுந்தரன்:—(முன்னிலுமதிகரித்த சந்தேகங்கொண்டு) இப்படத்தை விற்பனை செய்வாரோ, மாட்டாரோ தெரியாது. எஜமானர் வந்ததும் கேட்டுச்சொல்லவேண்டும். தங்களின் விலாசத்தைத் தெரிவித்தால் நாளைக்குக் கேட்டு வந்து சொல்கிறேன்.

வாலிபன்:—நாளைக்கே நாங்கள் மீண்டும் வந்து வாங்கிக்கொண்டு போகிறோம்; கேட்டு வையுங்கள்—என்று கூறிவிட்டு மற்றொருவனுடன் போய்விட்டான்.

அப்போது மணி ஆறு அடிக்கும் சமயமாய் விட்டது. சுந்தரன் அவர்கள் சென்றதும் அவர்கள் மேல் சந்தேகங்கொண்டு அவர்களைத் தொடர எண்ணினான்.

"இவர்கள் சமிஞைசெய்ததையும் உடனே படத்தைவிலைக்குக் கேட்டதையும், இவர்கள் எவ்வளவு பணமேனும் கட்டி எடுத்துக் கொள்ளத் தயாராக இருப்பதையும் பார்த்தால் இவர்கள் பத்மவல்லியை நன்றாய் அறிவார்கள் போலத் தோன்றுகின்றது. இவர்களிருப்பிடத்தைக் கண்டு பிடித்துப் பின் இவர்களால் பத்மம் இறந்ததின் உண்மையைத் தெரிந்துகொள்ளும் வழியைத் தேடவேண்டும்" என்று தீர்மானித்துக்கொண்டு சித்திரக்காரரை நோக்கி "ஐயா! தாங்கள் தயவுசெய்து காட்சிச்சாலையைப் பூட்டிச் சாவியை வைத்துக்கொள்ளுங்கள். நான் சென்று வயித்தியரிடம் மருநது வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுத் தன் உடைகளைமாற்றி வேறு உடை உடுத்துக்கொண்டு அவர்களறியாது அவ்வாலிபரைப் பின் தொடர்ந்தே சென்றான்.

அவர்கள் வெகு தமாஷாய் சிரித்து விளையாடிக்கொண்டே ஒரு ஓட்டலிற்குள் நுழைந்தார்கள். சுந்தரன் அங்கு அருகிலுள்ள ஒரு கடையில் உட்கார்ந்திருந்தான். சற்று நேரங் கழித்து உள்ளிருந்து அவர்கள் ஒரு மூட்டையுடன் வெளியில் வந்தார்கள். அவர்களைக் கவனித்த சுந்தரன் மீண்டும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றான். அவர்கள் தமாஷாகப் பேசிக்கொண்டே வெகு உல்லாசமாய்ச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஏழு மணி ஆய்விட்டது. அவர்கள் அநேக தெருக்களைத் தாண்டிக் கொண்டு ஒரு மாடி வீட்டையடைந்து அதனுள் சென்றார்கள். சுந்தரனும் அந்த வீட்டின் படியேறி ஜன்னலின் இடுக்கு வழியில் பார்வையைச் செலுத்தினான். அங்குக் கூடத்தில் ஓரறையைத் திறந்து அந்த அறையில் அம்மூட்டையை வீசி எறிந்து விட்டு ஏதோ பேசினார்கள். இதிலிருந்து சுந்தரன் அவ்வறையில் யாரோ இருப்பதாக ஊகித்துக்கொண்டான். பேசியது மிகவும் மெல்லிய குரலிலிருந்ததால் அது விவரமாக இவன் காதிற்படவில்லை.

இதற்குள் உள்ளிருந்தவர்கள் அந்தக் கதவைச் சாத்திப் பூட்டிக்கொண்டு வெளியில் வருவதைக் கண்ட சுந்தரன் எழுந்து முன்போல வீதிக்குப்போய்விட்டான். அவர்களிருவரும் முன்போலவே ஷோக்காகப் பேசிக்கொண்டே செல்கிறார்கள். அவர்கள் அகஸ்மாத்தாகத் திரும்பியபோது சுந்தரனைப் பார்த்துவிட்டார்கள்;

இவ்வழியே யாரோ மனிதர் வருவதாக மட்டும் தெரிந்துகொண்டார்கள். சுந்தரன் "ஐயோ! காரியம் எவ்விதமாகுமோ தெரியவில்லையே? இவர்கள் அங்கு சொன்னதையும், பின்னர் அந்த மாடிவீட்டில் செய்ததையும் கண்டால் ஏதோ சந்தேகமாகவே இருக்கின்றது. இவர்கள் அவ்வறைக் கதவைத் திறந்ததும் ஏதோ பேசினார்களே! அங்கு யாரோ மனிதர்களிருப்பதால் தானே பேசியிருக்கவேண்டும்? இல்லையேல் ஏன் பேசுகிறார்கள்? அவர்கள் பேசிய மாதிரி ஏதோ ஆத்திரத்துடனும் கடுமையாயும் பேசியதாகத் தெரிகின்றது. இவர்களப்படிப் பேசி விட்டு வரவேண்டிய காரணம் யாது? அவ்வீட்டில் வேறு மனிதர்கள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. அவ்விதம் மனிதரிருந்தால் வீதிக்கதவை இவர்களே பூட்டிக்கொண்டு வந்திருக்கிறார்களே! என்ன காரணத்தினால் அவ்விதம் செய்திருக்கிறார்கள்? ஒருகால் அவ்விடத்தில் இவர்களுக்கு விரோதி யாரையேனும் வைத்துப் பூட்டியிருப்பார்களா? ஒன்றும் விளங்கவில்லையே! நமக்குப் பத்மவல்லியைப்பற்றி உண்மையான தகவல் ஒன்றும் தெரியவில்லையே. நாம் பாடு படுவதெல்லாம் பலன் தருமோ, தராதோ தெரியவில்லையே! உண்மையில் பத்மம் இறந்திருப்பது விளங்கிவிட்டால் உத்தரக்ஷணமே என்னுயிரை மாய்த்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஐயோ! அவளும் இனிக் கிடைப்பாளா? என் துயரமும் நீங்குமா! ஜகதீசா! என் கண்மணியை நான் காணும் பாக்கியம் உண்டா" என்று எண்ணமிட்டுச் செல்கையில் மறுபடி யொருமுறை அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். அப்போதும் சுந்தரன் பின்னால் வருவதைக் கண்ட அவர்களுக்கு இவன்மேல் சந்தேகம் உண்டாய்விட்டது. இவன் யாரோ தெரியவில்லையே! நம்மை ஏன் பின்றொடர்ந்து வரவேண்டும்? இதை விசாரிக்காது போய்விட்டால் நமக்குத் தான் கஷ்டமாகும். இவன் யாரென்பதைக் கேட்கவேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டவர்களாய்ச் சட்டென்று நின்றுவிட்டார்கள்.

இதைக் கண்ட சுந்தரனும் நின்றுவிட்டான். அவனுக்கும் பயம்அதிகரித்துவிட்டது. இரவோ கொடிய கருநாகம்போல் சீறிக்கொண்டு வந்துவிட்டது. தன்னைக் கண்டுகொண்டு இவர்கள் நின்று

விட்டார்களென்பதைச் சுந்தரன் ஊகித்துக்கொண்டான். "தானும் போகாமல் நின்றுவிட்டால் அவர்களுடைய சந்தேகம் அதிகரிக்க இடமுண்டாகும். நாம் முன்னால் சென்றுவிட்டாலோ இவர்கள் போகுமிடத்தையும் கண்டுபிடிக்க முடியாமல் போவதுடன் நமக்கும் வழி தட்டுக்கிட்டு அலைய நேருமே என்ன செய்வது? தர்ம சங்கடமாய்விட்டதே!" என்று பலவாறாய் யோசித்தபடியே ஓர் மரத்தின் மறைவாக நின்றுவிட்டான்.

இதைக் கண்ட அவர்கள் முன்னிலுமதிகரித்த சந்தேகத்துடன் சுந்தரனருகில் வந்துவிட்டார்கள். சுந்தரனுக்குப் பயம் அதிகரித்துவிட்டது. ஆயினும் அவன் தைரியத்தைக் கைவிடாது நிற்கிறான். வந்தவர்கள் "நீ யாரையா! எங்களை ஏன் தொடர்ந்து வருகின்றாய்? ஏன் நின்றுவிட்டாய்?" என்று சுந்தரனைக் கேட்டார்கள். சுந்தரன் சமயோசித புத்தியுடையவனாகையால் அவன் யோசனையுடன் பேசத் தொடங்கித் தன்னை மிகவும் கீழ் ஜாதியாரைப்போல் நினைக்கும்படியாக "சாமீ! இன்னு சொல்ரீங்க; நானு ஒங்களை தொறத்திலீங்களே! எங்க ஊடு இண்ணும் 2 கல்லு கீது; அங்கனே போவணும். அதுக்காவ வாரேன். நீங்க எண்ணெ இண்ண நெனெச்சிங்கொ! சாமீ! கால்லெ முள்ளு குத்திச்சு. அத்தை எடுக்குண முண்ணு நிண்ணே. நீங்க நம்ப ரெட்டியார் ஊட்டு புள்ளெங்களா! எங்கெ போரீங்க?" என்றான்.

வந்தவர்:—நீ எந்த ஊரு? உங்க ரெட்டியார் யாரு?

சுந்தரன்:—இதோ பக்கத்திலே தாமர கொளத்துக்கு ஒரு கல்லிலே காவடிண்ணு ஊரு நம்புளுதுதான். அங்கே தங்கவேலு ரெட்டியாரு மகங்க ஜாயலா இக்கிறீங்கண்ணு கேட்டேஞ் சாமீ! இந்த ராத்ரி நேரத்திலே நீங்க எங்கே போரீங்கசாமீ!" என்று தனது குரலை மாற்றிச் சாமர்த்தியமாய்க் கேட்டான்.

வந்தவர்கள் தாங்கள் அருகில் தங்களது வீட்டிற்குப் போவதாகக் கூறி சந்தேகம் சற்று நீங்கப் பெற்றவர்களாய் விசையாக நடந்தார்கள். சுந்தரனும் கூடவே சற்றுப் பின் தங்கியபடியே சென்று கொண்டிருக்கையில் தாமரைக் குளம் வந்தது. அக்குளத்தைத் தாண்டி வாலிபர்கள் குறுக்கே போய்க்கொண்டிருக்கையில் சுந்தரனும் பின் சென்றான்.

மீண்டும் திரும்பிப் பார்த்த வாலிபர்கள் சுந்தரனைக் கண்டு மேலும் சந்தேகங்கொண்டு, "ஏனடா! நீ காவடிக்குச் செல்வதாகச் சொல்லியவன் குறுக்கே ஏன் வருகிறாய்? நேராகவல்லவோ செல்ல வேண்டும்?" என்றார்கள்.

சுந்தரன் காலையில் பூக்காரனுடன் சென்று பார்த்துவந்த ஊரின் பெயரைக் காவடி என்பதை அவனாலறிவானாகையால் அவன் ஊரின் பெயரைச் சொல்லிவிட்டான். அவர்சள் வழி, ஊரின் பெயர், முதலியவற்றைத் தெரிவார்களாகையால் இவனைக் கேட்டதும் சற்று நிலைகலங்கிவிட்டான். எனினும் தைரியத்தை விடாது பேசத் தொடங்கி, "ஆஞ்சாமீ! இருட்டிலே தெரிலீங்க" என்று கூறி நேரே செல்லலாயினான். பத்தடி சென்றதும் அங்கு ஒரு மரத்தின் மறைவில் நின்றான். அவர்கள் அவன் நிற்பதை யறிந்து போகத் தொடங்கினார்கள்.

சுந்தரன் அவர்கள் சென்ற 5 நிமிடத்திற்கெல்லாம் மீண்டும் அவர்களைப் பின்பற்றிச் செல்லலாயினான். அவர்கள் கொஞ்ச தூரம் சென்று திரும்பிப் பார்க்கையில் அங்கு மீண்டும் இவன் வருவதை யறிந்ததும் இவன்மீது கடுங்கோபங் கொண்டு உக்கிரத்துடன் திரும்பிவந்து சுந்தரனை நோக்கி, "தடிப்பயலே! நீ எங்களையே தொடருவதை நாங்களறிய மாட்டோமென எண்ணுகிறாயா! நீ அதை மறைக்கும்பொருட்டுப் பொய்யைக் கூறியே வருகிறாயா ராஸ்கல்!" என்று கூறி அவனை ஒரே தள்ளாகக் கீழே தள்ளி அவனுடைய அங்கவஸ்திரத்தினாலேயே இருவருமாக அவன் கையையும் காலையும் பின்புறம் பிணைத்துக் கட்டிக் குளத்தங்கரையில் உருட்டிவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். அந்தோ! உருட்டப்பட்ட சுந்தரனின் மனம் எவ்விதமிருக்கும் என்பதை ஊகித்தறிவதே நலம்.

18-வது அதிகாரம்.

ஓட்டைத் தோண்டி சிரேட்டம் பெற்றது

செல்லப்பாவின் வழக்கில் அப்பீலில் தூக்குத் தண்டனையே ஏற்பட்டதைக் கேட்ட சைதாப்பேட்டை பங்களாவிலுள்ள ஏனை

யோரும் பெரிய இடி தங்கள் தலைமீது விழுந்துவிட்டதுபோலக் குன்றிவிட்டார்கள். ஜெமீந்தாரின் உறவினர்கள் அநேகர் இச்செய்தியையும் அந்த ஜெமீன் சமஸ்தானம் அடியோடு அழிந்துவிட்டதையும் எண்ணி வருத்தமுற்றுச் சைதாப்பேட்டைக்கு வந்து அங்கு லக்ஷ்மியம்மாளின் நிலைமையையும் செல்லப்பாவின் நிலையையும் கண்டு கதறுகிறார்கள். அவர்கள் அபாண்டத்தினால் அகாலமான முடிவு நாள் செல்லப்பாவுக்கு வந்துவிட்டதை எண்ணி அவனைப் பார்க்கும்பொருட்டுக் கூட்டங் கூட்டமாய் ஜெயிலதிகாரிகளிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு சென்று பார்த்து வருகிறார்கள். செல்லப்பா முன்னாலிருந்த நடத்தையை அறவே மறந்து முற்றும் நல்வழியில் திருந்தி விட்டதை யெண்ணி அவர்கள் இன்னும் விசன மதிகரித்துக் கலங்கி வருகிறார்கள். உறவினர்களில் ஒருவரான நமது அழுமூஞ்சி அண்ணாவியும் மணத்தக்காளியம்மாளும் தாமும் செல்லப்பாவையும் லக்ஷ்மியம்மாளையும் பார்க்கவேண்டுமென்று எண்ணிப் பின் வருமாறு பேசுகிறார்கள்.

அழுமூஞ்சி:—ஏண்டீ! செல்லப்பாவின் கதி நமது வரப்ரஸாதியால் எவ்விதமாய் விட்டது பார்! 'அடே சண்டாளா! தாசிவீடு போக வேண்டாம்' என்று நான் முட்டிக் கொண்டேனே! பாவி அதைக் கேளாது சென்றதன் பலன் அவர்கள் குடியை அடியோடு அழித்து விட்டானே! இந்தப் பாதகம் நம்மை விடுமா! கொடும்பாவி உன்னாலேயே அவன் முற்றும் அழிந்து விட்டான். அந்தக் கொலைபாதகனையும் இத்தனை மாசமாய்க் காணவில்லை. அவன் எங்கு தொலைந்தான் என்று அறிவது?

மணத்தக்காளி:—என்மேல் ஏன் பழி சுமத்த வேண்டும்? நீங்கள் வளர்த்த விமர்சை அப்படியிருக்கின்றது. அவன் எங்கு சென்றான் என்பது எனக்கு எப்படித் தெரியும்? அவன்எப்படியும் புத்திசாலிதான்; வந்து சேருவான். நாம் அந்தச் செல்லப்பாவின் வீட்டிற்குச் சென்று இனியேனும் விசாரித்து வர வேண்டாமா! அவனை என்றைக்கு தூக்கிலிட்டு விடுவார்களோ! அதற்குள் அவனைப் பார்க்கா விட்டால் நன்றாயிருக்குமா?

அழுமூஞ்சி:— தடிமுண்டை! நீ செய்த வேலையெல்லாம் அவர்கள் குடியைப் பாழாக்கி விட்டது. அவர்களை நீயே இந்த

நிலைக்குக் கொண்டு வந்து விட்டு வெட்க மின்றி அவர்களை நீ விசாரிக்கவும் வேண்டுமா! நான் அன்றே முட்டிக் கொண்டேன். அந்தப் பத்மவல்லியை நமக்குக் கொடுக்க மாட்டார்கள்; வேண்டா மென்றேன். நீ என்னவோ சதி யோசனை செய்து அவனை நகை திருடும் படியாகக்கூறியனுப்பினுய்! பாவி செல்லப்பாவை அழைத்து அந்தப் பட்டத்தை அவன் தலையில் கட்டி விட்டே னென்று தைரியமாகக் கூறி மகிழ்கிருன். நீயும் பாவி உடந்தையாக இருக்கிருயே! அவன் முதலில் அந்த ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டதனுலல்லவோ அவன் உயிருக்கே ஹானி வந்து விட்டது. என்மனமறிய குற்றமுற்றும் நம்மீதிருக்கும்போது நான் அவர்கள் முகத்தில் விழிக்க மாட்டேன். சண்டாளி! நீ எவ்வித மேனும் நாசமாய்ப் போய்விடு. இனி உன்னுடைய சகவாசம் எனக்கு வேண்டாம். எனக்கு உங்கள் மீதுள்ள ஆத்திரத்தில் நான் செல்லப்பா குற்றவாளியல்ல வென்று ரூபித்துவிடலா மென்றும் மனம் துணிகின்றது.

மணத்தக்காளி:-ஆமாம், பெத்த பிள்ளையைக் காட்டிக் கொடுக்காமல் மற்றயாரைக் காட்டுவார்கள்? நீங்கள் வந்தால் வாருங்கள்; இல்லாவிட்டால் போங்கள். நான் பக்கத்து வீட்டுச் சுண்டைக்காயம்மாளை அழைத்துக் கொண்டு போய் விசாரித்து வருகிறேன்—. என்று கூறி விசையாக எழுந்து அடுத்த வீட்டுக்காரியை அழைத்துக்கொண்டு திருவல்லிக்கேணியிலிருந்து கால் நடையாக சைதாப்பேட்டைக்குப் பிரயாணமாய் வந்து கொண்டே யிருக்கையில் அவளுக்குத் தெரிந்த ஒரு மனிதன் எதிரில் வந்து ஆஸ்பத்திரிக்கா போகிறீர்கள்?" என்று கேட்டான்.

இது கேட்ட மணத்தக்காளி "ஆஸ்பத்திரியில் என்ன காரியம்? அங்கு யாரிக்கின்ருர்கள்?" என்ருள்.

வந்தவன்:—அதென்ன அப்படிக் கேட்கிறீர்களே! ஆஸ்பத்திரியில் உங்கள் குமாரன் வெகு அபாயகரமான ஸ்திதியில் இன்று காலையில் வந்து படுத்திருக்கிருனே அது தெரியாதா! அங்கு போவதாகத் தானே எண்ணினேன்.

மணத்தக்காளி:—ஆ என் குமாரனு! ஆஸ்பத்திரியிலா! உனக்குத் தெரியுமா!

வந்தவன்:— எனக்கு நன்ருகத் தெரியும். நான் பார்த்துவிட்டுத் தான் வருகிறேன்—என்ருன்.

உடனே மணத்தக்காளியம்மாளும் சுண்டைக்காயம்மாளும் அடித்துப் புடைத்துக்கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கிச் செல்லலாயினர்.

பதைத்துக் கொண்டே ஆஸ்பத்திரிக்குப் போய் அங்குள்ள வேலைக்காரர்களின் உதவியால் வரப்ரஸாதி இருக்குமிடத்தைஅவர்கள்அடைந்தார்கள்.அங்கு வரப்ரஸாதிவெகுகோரமான நிலைமையில் படுத்திருந்தான். அவனைக் கண்ட மணத்தக்காளி "அடே என் கண்ணே! உனக்கு என்னடா உடம்பு? ஏனடா இவ்விதம் படுத்து விட்டாய்? என்னப்பனே! இத்தனை நாளாய் நீ எங்கு சென்றிருந்தாயடா? என் செல்வமே! என்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாது இது காறும் எவ்விடம் போயிருந்தாய்!" என்று புலம்பிக் கொண்டே கேட்டாள்.

இவள் கூறிக் கொண்டே வந்ததைக் கேட்ட வரப்ரஸாதி பேசவும் சக்தி யற்றவனாய் மெல்ல நிதானமாய்ப் பேசத்தொடங்கி கண்ணில் நீர்பெருக்கியவாறு, "அம்மா!....பா....வி....எ....ன்....னை.... ஏ....ன்....பெ....ற்....றா....ய்?....அ....நி....யா....ய....மா....ன....பா.... பத்....தை....ச்....செ....ய்....து....இ....வ்....வி....த....ம்....அ....னு...ப....வி....க்....கி....ன்...றே....ன்........உ....ன்....னா.....லே.....யே..... நா...ன்....கெ...ட்...டு....இ...ற...க்...கு...ந்....த... ...று....வா....ய்... ...க்....கு....வ...ந்....து....வி....ட்....டே....ன்"........என்று கூறி அதற்குமேல் பேச மாட்டாமல் புலம்பினான்.

இதைக் கண்ட மணத்தக்காளியம்மாள் "என்னடா! குழந்தாய்! ஏனடா உனக்கு இத்தகைய துன்பம் வந்து விட்டது? நீ செய்த காரியத்தை நான் இது பரியந்தம் யாருடனும் சொல்லவில்லையடா! கண்ணே! உன் செய்தி வெளியாய் விட்டதா என்ன? நீ போலீஸாரிடம் அகப்பட்டுக் கொண்டாயா! என்னடா! என் கண்ணே! வரப்ரஸாதி! நீயும் இத்தனை நாள் என்னை மறந்து விட்டாயே! உன்னிஷ்டத்தை நான் நிறை வேற்று வதற்குத் தானே நீ சொல்லியபடி யெல்லாம் செய்தேன். அப்படியிருக்க நீ என் மேல் குறை கூறுகிறாயே! இத்தனை நேரம் உன் தந்தை என்னை வைதது மட்டு மிதமல்ல. என்னால் தான் நீ கெட்டு விட்டதாகச் சொல்கிறார். நீயுமப்படியே சொல்கிறாயேடா! என்னப்பனே! ஏனடா பதில் பேசாதிருக்கிறாயே? "என்று கூறி மீண்டும் புலம்பினாள்.

இதைக் கேட்ட வரப்ரஸாதி மெல்ல சமாளித்துக்கொண்டு "அம்மா! என்னால் இனிப் பேசமுடிய வில்லை. நம்முடைய கெடு மதியால் அத்தையின் குடும்பமே கெட்டு விட்டது. இனிமேல் என்னஇருக்கிறது? சீக்கிரத்தில் செல்லப்பா தூக்கில் சாகப்போகிறான். அவனுடைய மரணத்திற்குக் காரணம் நானே யன்றோ? அவன் உயிரை வாங்குவதற்குள் என்னுயிரை நான் மாய்த்துக்

கொள்ளப் போகிறேன். அவன் அன்று ஏதோ காரணமாக நீலாமணி வீட்டின் பக்கத்தில் வந்ததை நான் அவனென அறியாது உள்ளே விட்டு வந்ததும், அவனுக்குத் திருட்டுப் பழி வந்ததும், அவன் காதலித்த பெண் வெறுக்கவும், அதே தருணம் பார்த்து அவளை யாரோ கொலை செய்து அந்தப்பழியைச் செல்லப்பாவின் மீதிலேயே சுமத்தவும், அநியாயமாக அவன் உயிர்போகவும் இத்தனையும் நடந்ததெல்லாம் என்னாலல்லவா? நான் செல்லப்பாவென்பதையறியாமல் செய்தாலும் நான் செய்தது வஞ்சகச் சூழ்ச்சியல்லவா? செல்லப்பா ஒருபோதும் துன்மார்க்கமான செய்கை எதுவுமே செய்திருக்க மாட்டான்; செய்யவே மாட்டான். அவன் என்னுடைய மோசத்தினால் தான் இந்த நிலைமைக்கு வந்துவிட்டான். அந்தப் பழியை ஈசனே வேண்டிய வரையில் என்னிடம் தீர்த்துக்கொண்டார். எனினும் உயிர்மட்டும் போகவில்லை; ஆகையால் நானே அதை மாய்த்துக்கொள்கிறேன். இத்தனை வயதாகிஎன்புத்திகெட்டுத்துர்க்கிருத்யம்செய்ததுபோதும். இனி, நான் உடனே இறக்கவேண்டும். நான் வந்த செய்தியையும் உனக்குத் தெரிவிக்க எனக்கு இஷ்டமில்லை. இதை யார் மூலமாயறிந்துவந்து விட்டாயோ அறியேன். அத்தையின் கதியும். அத்தானின் கதியும். பத்மம், ஜெமீந்தார் இவர்களின் கதியும் எவ்விதமாய் விட்டதென்பதை நான் நேற்றே அறிந்தேன். அப்போதிலிருந்து என்னுயிர் துடிப்பது மட்டுமிதமல்ல. நான் இவ்விடத்திற்குப் பலவந்தமாக வந்திருப்பதால் இது பரியந்தம் என்னுயிர் இருக்கின்றது. எனக்கு வந்த அநுபவமும் பாபமும் போதும். இனிமேலும் நீ புத்தி கூற வேண்டாம்.'' என்று ஒவ்வொரு வார்த்தையாகத் திணறித் திணறிக் கூறியதைக் கேட்ட மணத்தக்காளியம்மாள் "என்னடா சாமி! நீ என்னபேசுகிறாய்? உன் சித்தச்வாதீனத்துடன் பேசுகின்றாயா அல்லது நினைவு தப்பிப் பேசுகின்றாயா?'' உன்னுடைய சாமர்த்தியமானபுத்தி எப்படியடா மந்தமாய்விட்டது? நீ பேசுவது சற்றும் சரியன்று. அவனுக்கு நீலாமணியின் வீட்டுத்திருட்டுக் குற்றத்தைச் சுமத்தியதால் குற்றவாளி என்று பட்டம் வந்து விட்டது உண்மைதான். கொலைக்குற்றத்திற்கு நீ என்ன செய்தாய்? அவன் தலைவிதியினால் அப்பழியைச் செய்தே யடைந்தானோ செய்யாமலே அடைந்தானோ! இதைப்பற்றியெல்லாம் நீ வீண்கவலைப் படாதே! பயித்தியம் போல் உன்னுடைய காரியத்தை நீயே சொல்லிக்கொண்டு அகப்பட்டுக் கொள்ளாதே! வாயை மூடடா! சாமி!'' என்று கூறிக்கொண்டே வருகையில் அவ்விடத்திற்கு ஓர் பெரியவரும் அவருடன் ஒரு வாலிபனும் வந்தார்கள். இவர்களைக் கண்ட மணத்தக்காளி பயந்து ஒதுங்கி அப்புறம் விலகிக்கொண்டாள். வந்தவர்கள் அங்கு ஆசனத்திலமர்ந்து வரப்ரஸாதியை உற்று நோக்கினார்கள்.

182839

இனாம்! இனாம்!

முற்றிலும் இனாம்!

'C' ரிஜிஸ்டர்! டைம்பீஸ் இனாம்.



'C' ரிஜிஸ்டர்! டைம்பீஸ் இனாம்.

எங்களின் "தாரா" லீவர் 18-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் கடியாரம் பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதை வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ 5. இக்கடியாரத்தில் உள்ள டையலின் பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிட்டிருக்கிறது. முந்துங்கள்.

காப்டன் வாச் கம்பெனி, தபாற்பெட்டி நெ 265, மதராஸ்.

ஒரு மாதம்

பாதிவிலை! பாதிவிலை!

வரையிலும்

அசல் விலை ரூபாய் 14.

பாதி விலை 7,



22 காரட் ரோல்டு கோல்டு கைக்கெடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும், இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பிவைக்கப்படும். பாதி விலை ரூ 7. ஒவ்வொரு கெடியாரமும் ஒரு பட்டு பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

ஸ்வான் ஹவுஸ்.

தபால் நே, 508, பி, டி மதராஸ்.

லோகோபகாரி.

முப்பத்திமூன்று ஆண்டுகளாய் நிலவும்.

வாரப் பத்திரிகை.

பத்திராதிபர்—பரலி-சு. நெல்லையப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிரும் புது வாழ்வும் பெறுவதற்காகப் பாடுபட்டு வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அறநெறியும், அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்துவருகிறது. இதனைத் தமிழ்மக்கள் ஆதரிக்கவேண்டும்.

வருஷ சந்தாரூ பாய் நாலு. வெளிநாட்டுக்கு ரூபாய் ஆறு.

மாதிரிப் பிரதி இனாம்.

காரியஸ்தர்,

லோகோபகாரி பத்திரிகாலயம்,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

"கிருஷிகன்."

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள் :—

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு
பென்ஷண்ட் விவசாய டேப்டி டைரேக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்று தான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும் கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடைப்பவே கிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன் கூலிசேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள். மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்,

"ஜகந்நாதபாத்" சைதாப்பேட்டை, சென்னை.

இனும்! ஒரு அணு ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு இனும்!
ஸ்ரீமான் வ. கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்கள் எழுதிய
போலீஸ்கிலி பொதி ராயர்.
சிரிப்பைத்தரும் துப்பறியும் நாவல்.
இதில் கயிற்றைக்கண்டு பாம்பெனப் பயப்படும் போலீஸ்புலி படும் திண்டாட்டம் படிக்கப்படிக்க ஓயாச் சிரிப்பைத்தரும்.

வத்ஸலா கம்பெனி
திருவல்லிக்கேணி, மதராஸ்.

நயம்! வெகு நயம்!

உயர்தரமான பம்பாய் கேட்டிச்சாயமுள்ள

கலர் புடவைகள்.

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்பு ரோஸ், கருப்பு, ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி. அளவு $18 \times 2\frac{3}{4}$ முழங்கள்.

கேட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!

முதல் ரகம் விலை ரூ. 5-8-0; 2-வது ரகம் ரூ. 4-8-0. பூக்கொடிக்கரை செய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0. அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

பிளைன்: பயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு, முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும்; பெங்களூர் முந்தாணி போட்டது; கலர்கெடாது; மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாது; ரம்மியமான தோற்றமுள்ளது, நேர்த்தியான நெசவு கொண்டது; நீடித்து நிற்பது; உறுதியானது; அளவு $18 \times 2\frac{3}{4}$ முழங்கள். விலை ரூ. 12-8-0. ரவிக்கை துண்டு 1-க்கு 12 அணா.

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக்கொடி, தந்திக்கம்பி, டில்லி தர்பார், முதலிய தினுசுகள்.

$18 \times 2\frac{3}{4}$ விலை 13 8 0.
ரவிக்கை 1 முழம் 0 14 0.

மேற்படி பிளைன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்த உருப்படி 1-க்கு 3-8-0 அதிகம்.

ஏஜண்டுகள் தேவை.

குறிப்பு:—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம்; ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால்பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி, ஜி. டி. சென்னை.

ரக்ஷையும் மந்த்ர சக்தியும்

துரதிஷ்டத்தையகற்றி சுகஜீவனத்தை நாடுவோர்க்கு அவசியமானவை

	ரூ.	அ.
கௌரவம், தனம், கல்வி பெருமைக்கு	7	8
ஆரோக்கியம், சரீரபலம்பெற	7	8
வாக்சாதுர்ய சக்திக்கு	7	8
நீதிவிவகார கெலிப்புக்கு	10	0
விளையாட்டு, பந்தயம் சீட்டு	7	8
விவகாரங்களில் ஜயிக்க	10	0
மாதரிடம் ஆடவரன்பு பெருக	7	8
ஆடவரிடம் மாதரன்புபெருக	10	0
ஆடவராயினும் ஸ்திரீயாயினும் முறையே வசீகரித்துக்கொள்ள	7	8
நல்ல பாருல் அறுவடையாக	7	8
ரப்பி ஸாலமனின் ரக்ஷை	15	0
ஜயவீரஹீப்ருவினு லணியப் பெற்ற ரக்ஷை இரண்டாவது ரகம்	21	0
முதலாவது ரகம்	30	0

குறிப்பு :-மணியார்டராவது கவர்ண்மெண்ட் கர்ரென்ஸி நோட்டாவது அனுப்பினுல், வீட்டிற்கே நேராக ரக்ஷை வந்து சேரும். ரக்ஷைவேண்டுவோர் முழுக்கிரயத்தையும் அட்வான்ஸாக அனுப்பிவிடவேண்டும். வி. பி. யில் அனுப்ப முடியாது.

D.A. RAMA DUTH,
Astrologer
No. 30 and 55, (J) Chekku St.
COLOMBO, Ceylon.

மதனசிங்கர்
அல்லது
உரிமை இழந்த சீமான்.

(திருத்தமான இரண்டாம் பதிப்பு.)

இந்த துப்பறியும் அபூர்வமான செந்தமிழ் நாவலை படிக்கத் துவக்கியவர்கள் முடிக்கிறவரையில் வேறெவ்விதமான அவசர வேலைகளிருப்பினும் அவைகளை மறந்து, இந்த நாவலிற் செறிந்துள்ள சொற்சுவை பொருட்சுவைகளால் வசியமாக்கப்பட்டு, வாசித்து முடித்த பின்னரே அவைகளைக் கவனிக்கச்செய்யும் என்பது நிச்சயம். விலை ரூ. 1 4 0.

சுந்தரவதனி
அல்லது
தர்மமே ஜெயமளிக்கும்,

இது ஓர் அதியற்புத சிங்காரமான காதல் ததும்பும் துப்பறியும் தமிழ் நவீனம். படித்தவுடன் திடுக்கிடச்செய்து, மனதைக் கவரும் ஆச்சரிய சம்பவங்களாலும், ரகஸ்யக் கடிதங்களாலும் நிறையப்பெற்றது. விலை அணு 12.

வசந்த சமுத்திரம் அல்லது இரண்டு ஜெகன் மோகினிகள்.

இந்த இனிய துப்பறியும் நாவலில் துப்பறியும் சிங்கமாகிய ஸிம்ஹள நாதர் தாம் முன்னமே காதலித்த வசந்தமாலை என்பவளை வேறொரு திருடன் காதலிப்பதும் ஜயசிங் என்னும் பரதேசி வருதலும், திலகசமுத்திரம் தோன்றி சில விஷயங்களை உரைத்தலும், ஸிம்ஹள நாதரை கொலை செய்ய முயற்சிப்பதும் இந்நாவலின் கண் ரஸங்குறைவு படாமல் ஆரம்ப முதல் முடிவுவரையில் படிப்பதற்குத் தூண்டும் இயல்புடையதாக எழுதியிருக்கிறது. விலை 0 12 0

வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி, சென்னை.

Sri Panduranga Press, Triplicane.

முதல் பரிசு ரூபா 25-0-0 3-வது பரிசு ரூபா 10-0-0
2-வது பரிசு ரூபா 15-0-0 3 பரிசுகள் ரூபா 5 வீதம்.

ஐந்து சந்தாதார்களைச் சேர்த்துக் கொடுக்கும் நேயர்கட்கு அடுத்த ஆண்டின் சஞ்சிகையை இனமாக அனுப்புவதுடன் அவர்களும் ஏஜண்டுகளும் பரிசுபோட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்க ளென்பதை மனமார்ந்த அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பத்திரிகையை ஆதரிப்பது சகலவிதமான தேசத் தொண்டின் பயனையும் அளிக்கு மென்பதைத் தாங்கள் அறிவீர்களாதலால் இப்பத்திரிகையின் ஆதரவின் விஷயமாய்க் கவனஞ் செலுத்தித் தேசத் தொண்டின் பயனை அடைவீர்களாக!

தங்கள் சகோதரி,

வை. மு. கோதை நாயகி.

ஸ்ரீமதி வை. மு. கோதை நாயகி அம்மாள்

எழுதிய

சண்பக விஜயம்

இந்த நாவல், "இது சிறந்த நாவல்" என்று நாவல் படிப்பதில் ஆர்வமுடையோர் புகழத்தக்கபடி நாவலுக்குரிய இலக்ஷணங்களுடன் அமைந்திருக்கிறது. இதனைப் படிக்கத்தொடங்கினால் முடிக்காமல் புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது. அல்லது கேட்டாலும் அப்படியே யிருக்கும். இது பால விநோதினிப் பத்திராசிரியராகிய **வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதியார்** எழுதிய முகவுரையுடன் கூடியது. இதுவரையில் எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும், பிறருக்குச்சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகப்போக்கையும், கர்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும், நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தம குணப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேகமேற்கோள்களுடன் விளங்க வைத்திருக்கிறபடியால், இந்த நாவல், கேவலம் நாவல் வகையில் எண்ணிப் புறக்கணிக்கத்தக்கதல்ல; போற்றத்தக்கதேயாம்.

மேலும் இதில் கூறியதையே கூறிப் படிப்பவர் மனத்திற்கு அருவருப்பைத் தரும்படியான சந்தர்ப்பம் எங்கும் காணக்கிடைக்காது. எந்தச் சம்பவமும் ஆச்சரியத்தை யுண்டாக்கக் கூடியதாயும், அறிவைப் புகட்டக் கூடியதாயும், தீயவருடைய மனதைத் திருத்தக்கூடியவகையிலும் சிறந்து நிற்கும். ஆதலால் இதில் ஒரு புத்தகம் ஒவ்வொருவருடைய கையிலும் பூஷணமாக விளங்கவேண்டியது இன்றியமையாததாகும். டிம்மி 40 பாரங்களும் அழகிய சித்திரப்படங்களும் கொண்டது. விலை ரூ. 1-12-0.

வத்ஸா கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.

அமிர்தாஞ்சனம்

அமிர்தாஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10. ரூ 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

உடனே முந்துங்கள்

மோஹினி தைலம்.
பாட்டில் 1-க்கு 0—12—0

படைமருந்து
டப்பி 1-க்கு 0—6—0

பல்பொடி
டப்பி 1-க்கு 0—2—0

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

அமிர்தாஞ்சன் டிபோ,

7. தம்புச் செட்டி வீதி, சென்னை

Edited and Published by V. M. Parthasarathy Iyengar,
PRINTED AT THE 'NOBLE PRESS,' TRIPLICANE, MADRAS S.E.